இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதே அடிப்படை நோக்கம்



5»

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
18 APR 2017
PERIODICALS DIVISION

தேசம்
Desham දේශම්
உண்மை | நேர்மை | துணிவு

2017 ஜனவரி 08
ஞாயிற்றுக்கிழமை
மலர் 1. இதழ் 3
விலை ரூபா 20.00
செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது.
ISSN 2536-8915

# 2017 அரசாங்கத்துக்கு ஆபத்து

## உட்கட்சிப் பூசலக்ளும், கோஷ்டித் தகராறுகளும்

இரா. இந்திரன்

புதிய ஆண்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகும் நிலையில் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி, ஐ.தே.க. கூட்டு அரசாங்கத்திற்குள்ளே உட்கட்சி பூசல்களும், தகராறுகளும், ஆளை ஆள் விமர்சிக்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

நல்லாட்சி என்ற பெயரில் கூட்டு சேர்ந்த ஐ.தே.க. வும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியும் முன்னாள் ஜனாதிபதியையும் அவரது ஆட்களை முன் தலைதூக்க விட பல விடயங்களை முன் எடுத்தது. 2»



# வடபகுதி பொலிஸாரின் அசமந்தம் பொது மக்களின் குற்றச்சாட்டு

சந்திரமோகன்

வட மாகாணத்திலுள்ள 26 பொலிஸ் நிலையங்களுக்கெதிராக யாழ் மாவட்ட பொலிஸ் ஆணைக்குழுவில் முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாக மேற்படி ஆணைக்குழுவின் பணிப்பாளர் கலாநிதி கந்தையா தியாகராசா தெரிவித்துள்ளார். பிரதான பொலிஸ் நிலையங்களான நெல்லியடி, அச்சுவேலி, யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை, மானிப்பாய், வவுனியா தெல்லிப்பளை, மல்லாவி, புதுக்குடியிருப்பு முள்ளிவளை, காங்கேசன்துறை ஆகிய பொலிஸ் நிலையங்களுக்கு எதிராக இவ் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கடந்த வருட ஆரம்பம் முதல் முடியும்வரை முறைப்பாட்டாளரின் முறைப்பாடுகளுக்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தெரிய வருகிறது. அப்பொலிஸ் நிலையங்களுக்குட்பட்ட பிராந்திய பொலிஸ் தலைமைக் காரியாலய அத்தியட்சகரிடம் முறையிட்டதன் பேரில் 20 முறைப்பாடுகளுக்குத் தீர்வு கிட்டியுள்ளதாகத் தெரிகிறது. இனிவரும் காலங்களில் யாழ் கச்சேரியில் அமைந்துள்ள வடமாகாண தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு நேரிலோ கடித மூலமாகவோ தத்தமது முறைப்பாடுகளைத் தெரிவிக்கக்கூடிய வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் பொலிஸ் நிலையங்களுக்கு எதிராகச் செய்யப்படும் முறைப்பாடுகளுக்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். அதற்காக மக்கள் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும். தற்போது பிரதேச, கிராம மட்டங்களில் விழிப்புணர்வுக் கூட்டங்களின் மூலம் தெளிவுபடுத்தப்படுகின்றன. 2»

# கிளிநொச்சி வளாகத்தில் தொழில்நுட்ப பீடம்

ரஞ்சிதன்

யாழ் பல்கலைக்கழத்தின் கிளிநொச்சி வளாகமான் தொழில்நுட்ப பீடத்தின் கற்கை நெறிகள் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் ஏற்கனவே விவசாய பீடம் மற்றும் பொறியியல் பீடம் என்பன இயங்கி வருகின்ற நிலையில் தற்போது தொழில்நுட்ப பீடமும் இயங்க ஆரம்பித்துள்ளது.

நாடளாவிய ரீதியிலிருந்து 211 மாணவர்கள் இங்கு அனுமதி பெற்றுள்ளனர் என யாழ். பல்கல்லைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்துள்ளார். 2»




# பெண்களுக்கான சமத்துவம் வழங்கப்பட வேண்டும்

யோகா

பெண்களுக்கான சமத்துவம் வழங்கப்படவேண்டும் அப்பொழுதுதான் நாட்டின் நிர்வாகத்தில் அபிவிருத்தியை மேற்கொள்ள முடியும். ஆனால் நமது நாட்டில் பெண்கள் சமமானவர்களாக இல்லை. தேசிய ரீதியில் பாராளுமன்றத்திலும் உள்ளூராட்சி சபைகளிலும் பெண்களின் அங்கத்துவம் குறைவானதாகவே காணப்படுகின்றது. இவ்வாறு மாற்றுக் கொள்கைக்கான நிலையத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஸ்ரீயாணி விஜயசுந்தர கூறினார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 225 உறுப்பினர்களில் 13 பேரே பெண்கள் ஆவார். இவர்களின் முஸ்லிம் பெண்கள் ஒருவர் கூட இல்லை. இரண்டு தமிழ்ப் பெண்கள் இடம் பெற்றுள்ளனர் இவ்வாறான நிலைமையில் முஸ்லிம் பெண்களுக்கும், தமிழ் பெண்களுக்கும் பிரச்சினைகள் இல்லையா என்று கேட்கத் தோன்றும். அவர்களுக்கும் பிரச்சினைகள் உள்ளன. போரின்போது துன்பங்ளையும் துயரத்தையும் அனுபவித்த பெண்கள் பலர் மட்டக்களப்பில் இருக்கின்றனர். 2»

UNIVERSITY OF JAFFNA LIBRARY 18 APR 2017

1ம் பக்க தொடர்ச்சி...

**2017 அரசாங்கத்துக்கு ஆபத்து**

ஆனாலும் மஹிந்த அணியினர் திட்டமிட்டு கூட்டு அரசாங்கத்தை வீழ்த்த வேண்டும் என்று செயல்பட்டு வருகின்றனர். இதே நேரத்தில் ஐ.தே.கட்சியுடன் சில முரண்பாடுகளை உருவாக்கி அவர்களை விமர்சிப்பதை ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் சில அமைச்சர்கள் கொள்கையாக கொண்டுள்ளனர். இதனை மஹிந்த அணியினர் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ள முனைகின்றனர்.

அபிவிருத்தி ஏற்பாடுகள் குறித்த சட்டமூலத்தைச் சரியாக அமைச்சரவைக்கு விபரிக்காமல் அதனை மாகாணசபைக்கு அனுப்பியது தவறு என்று ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி முழங்குகிறது. இந்த சட்டமூலம் எல்லா மாகாண சபைகளிலும் தோற்கடிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

அரசியலமைப்பு உருவாக்கத்தில் கூட சுதந்திர கட்சி ஐக்கிய தேசிய கட்சி ஆகியவற்றுக்கிடையில் தமிழ் மக்களுக்கு போதிய அளவு சுதந்திரம் விட்டுக்கொடுக்கக்கூடாது என்பதில் இந்த கட்சிகளுக்கிடையில் முரண்பாடுகள் உள்ளன.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்களான டிலான் பெரேரா எஸ்.பி. திசாநாயக்க போன்றவர்கள் வெளியிடும் கருத்துக்கள் ஐ.தே. கட்சியினை ஆத்திரமூட்டியுள்ளது ஆனாலும் அவர்கள் எதிர்க் கருத்துக்களை கூறாமல் மௌனம் சாதிக்கின்றனர்.

**வடபகுதி பொலிஸாரின் அசமந்தம்...**

ஐ.நா. சபையின் அடக்குமுறைகளை தடுக்கும் கமிட்டியின் 5வது சுற்றின் இறுதி அறிக்கை அண்மையில் வெளியிடப்பட்டது. இச்சுற்று ஜெனிவாவில் இடம் பெற்றது. இதில் இலங்கையை பிரதிநிதித்துவம் செய்து மேல்மட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

எமது நாடு தொடர்பாக வெளியிட்ட மிக நீண்ட அறிக்கையில் இவ்விடயம் குறித்தே வெளியிடப்பட்டுள்ளது. இதில் குற்றவியல்கள் தொடர்பாக துன்புறுத்துவது பரவலாக இடம்பெறுகின்றது என்ற ஆய்வு வெளியிடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

**கிளிநொச்சி வளாகத்தில் தொழில்நுட்ப பீடம்...**

அவர் குறித்த விடயம் தொடர்பில் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

யாழ். பல்கலைக்கழகத்தின் பத்தாவது பீடமாக தொழில்நுட்ப பீடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களில் எமது பல்கலைக்கழகம் மூன்றாவது நிலையில் தொழில்நுட்ப பீடத்தை ஆரம்பித்துள்ளது.

இங்கு அனுமதி பெற்றுள்ள மாணவர்களுக்கான அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. முதலாம் வருட மாணவர்களுக்கான தங்குமிட வசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அடுத்த வருடம் 525 மில்லியன் ரூபா செலவில் 400 ஏக்கர் காணியில் கட்டடம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அதன் பணிகள் நிறைவுற்றதும் பெரும்பாலும் இரண்டாம் வருட கற்கைகளை மாணவர்கள் அங்கு தொடரக் கூடியதாக இருக்கும். மேலும் இங்கு ஆண், பெண்களுக்குரிய இரண்டு விடுதிகள் காணப்படுகின்றன. மேலும் இரண்டு விடுதிகள் அமைக்கும் பணிகளும் இடம்பெற்று வருகின்றன.

**பெண்களுக்கான சமத்துவம் தொடர்ச்சி...**

கிழக்கு மாகாண சபையில் ஒரே ஒரு பெண் உள்ளார். இவரின் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வை பெற முடியாது. 1931-இல் சர்வசன வாக்குரிமை மூலம் ஒரு பெண் பிரதிநிதி தெரிவானார் 1977-இல் 168 அங்கத்துவர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் 11 பெண்கள் இருந்தனர். ஆனால் 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 13 பெண்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவ்வாறான நிலைமைக்கு காரணம் என்ன?

எமது மாற்றுக் கொள்கைக்கான நிலையம் இதுவரை மேற்கொண்ட கலந்துரையாடல்களில் அரசியலில் பெண்களின் பின்னடைவுக்குப் பல காரணங்கள் சுட்டிக்காட்டப்பட்டதாக இங்கு தெரிவிக்கப்பட்டது. அரசியல் பற்றிய விழிப்புணர்வு ஆர்வம் மற்றும் கணவரின் அனுமதி இன்மை, குடும்பப் பொறுப்பும் அதனால் நேரம் இன்மையும், சமூக கண்ணோட்டமும், அவதூறுகள், விமர்சனம் ஆகிய காரணிகளும் உள்ளடங்குகின்றது.

முஸ்லிம் பெண்களைப் பொறுத்த வரையில் மதரீதியான கட்டுப்பாடுகள் வடக்கு கிழக்கைப் பொறுத்தவரையில் பொருளாதாரதம் வறுமை, அரசியல் வன்முறை துஷ்பிரயோகம் போன்றவற்றை பெண்களைச் சந்தித்தபோது எடுத்துரைத்தனர். எனவே பெண்கள் சிறந்த அறிவினைப்பெற்று அடுத்த தேர்தலில் அதிக பெண்கள் தெரிவு பெற வேண்டும் என்றார்.

# புதைப்பொருள் ஆராய்ச்சியால் இன ஒற்றுமை சீர்குலையக்கக்கூடாது

வரலாறும் வரலாற்று மூலாதாரங்களும் பாதுகாக்கப்பட வேண்டும். ஆனால் அந்தப் பாதுகாப்புச் செயற்பாடுகளால் இன ஒற்றுமைக்கு எந்தவிதமான பங்கங்களும் ஏற்பட்டுவிடக்கூடாது. "ஆனால் இன்று நடந்துக்கொண்டிருப்பது என்ன? "என்று சிந்தித்து முடிக்கும் முன்பே" என்ன நடக்கப்போகிறதோ?" என்று கேள்வி எழுப்புகிறது.


அண்மைக் காலங்களில் நாம் அனைவரும் அறிந்த ஒரு விடயம்தான் அக்கறைப்பற்று பொத்தானை பழைமையான பள்ளிவாசல் புதைபொருளாராய்ச்சி பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதென்பது. புதைப்பொருள்கள் காணப்படக்கூடிய இடங்களை பேணுவது சிறப்பான ஒன்றுதான். இது தொடர்பாக அரசாங்கமும் விசேட அக்கறையும் காட்டிவருகிறது. இப்பிரதேசங்களைப் பாதுகாப்பதற்காக ஊர்க்காவல் படையினரை சேவையில் ஈடுபடுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிப்பால சிறிசேன அண்மையில் தெரிவிருத்திருந்தார்.

அக்கறைப்பற்று எல்லையில் உள்ள பழமையான பொத்தானை தர்ஹா பள்ளிவாசல் வெளியார் உட்செல்ல முடியாதவாறு முட்கம்பிகள் போடப்பட்டுள்ளன. இவ்வாறான இந்த புதைப்பொருள் அகழ்வாராய்ச்சிகளால் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் வாழ்ந்த காணிகளை இழக்க நேரிடுமோ என்று பிரதேச மக்கள் அஞ்சுகின்றனர். அதுமட்டுமல்லாது இந்த அகழ்வு ஆராய்ச்சியால் முஸ்லிம், தமிழ் மக்களுக்கிடையிலான ஒற்றுமை சீர்குலைக்கப்படும் என்றும், எங்களுக்குள் இருந்த புனிதமான உறவுகளில் விரிசல் ஏற்பட இவ்வகழ்வாராய்ச்சி வழிசமைப்பதாகவும் பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அரசாங்கம் இது குறித்துக் கடுமையாகச் சிந்தித்து, எந்த ஒரு இனத்திற்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் இவை முன்னெடுக்கப்பட வேண்டும். ஏனென்றால் இதை சாக்காகக் கொண்டு நம் நாட்டிற்கு ஒவ்வாத விசக் கிருமிகள் இச்சம்பவத்தை இனம் சார்பானதாகத் திசைத் திருப்ப முனைவர். வரலாறென்பது எல்லோருக்கும் பொதுவானதே! நாம் அவர்கள் விரிக்கும் சதி வலையால் சிக்காது, சிந்தித்து ஒரேத்தாய் மக்களாய் வாழ்ந்து தரணியை வெல்வோம்! புதியதொரு விதி சமைப்போம்!

**தகவல் - ஆசாத் ஆதாம் லெவ்வை**

# சம்பூர் மக்கள் தொடர்ந்தும் நிர்கதியில்




2015 ஆகஸ்ட் மாதத்தின் இறுதிப் பகுதியில் பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் தமிழ் தேசியக்கூட்டமைப்பினரின் பங்களிப்புடன் மக்களின் காணிகள் மீளக் கையளிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்றன. இந்நிகழ்வில் மக்களுக்குச் சொந்தமான 818 ஏக்கர் காணிகள் மீள வழங்கப்பட்டன.

சம்பூர் பிரதேசத்தைப் பொறுத்தவரையில், யுத்த சூழ்நிலையை விட, யுத்தம் முடிந்த பின்னரே அதிக வீடுகள் சேதப்படுத்தப்பட்டமை மாத்திரமல்லாமல், கனரக வாகனங்களின் உதவியுடன் தரைமட்டமாக்கப்பட்டன. மக்கள் இடம்பெயர்ந்த பின்னர் அவர்களது காணிகள் சுவீகரிக்கப்பட்டு, வர்த்தமானி மூலம் முதலீட்டுச் சபைக்கு வழங்கப்பட்டது. அனல் மின் நிலையம், கைத்தொழில் பேட்டை என இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டன. மக்களுக்கு சாதகமான உச்ச நீதிமன்றத் தீர்ப்பு மற்றும் மக்களின் தொடர் ஆர்ப்பாட்டங்களின் பின்னர் அக்காணிகள் மக்களுக்கு மீளக் கையளிக்கப்பட்டாலும், அந்த வர்த்தமானி விடுவிக்கப்பட்டு காணிகள் நிரந்திரமான முறையில் பிரயோகப்படுத்தக்கூடிய நிலையில் கையளிக்கப்படவில்லை என்று ஊர் வாசிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தமது காணிகளை அவசரமான தேவைகளுக்காவது வங்கியில் வைத்துக் கடன் பெற முடியாத நிலமை தொடர்ந்தும் காணப்படுவதாகவும் குடியேற்றப்பட்ட பிரதேசங்களில் இருந்த மயானங்கள் கடற்படைக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் காணப்படுவதால், மக்கள் மரணச் சடங்குகளை நடாத்துவதில் பாரிய நெருக்கடிகளை எதிர் நோக்குவதாகவும் பிரதேசவாதி ஒருவர்தேசத்திற்குத் தெரிவித்தார். இது தொடர்பாக உள்ளூர் அரசியல்வாதிகளிடம் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டும் அவர்கள் மிகவும் அசமந்தப் போக்குடன் நடந்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

**ரஞ்சிதன்**

**தேசம் அடுத்த இதழ் 2017 பெப்ரவரி 5ம் திகதி எதிர்பாருங்கள்.**

தேசம்
உண்மை | நேர்மை | துணிவு

ஆசிரியர் பீடம் : 011 3098429
பெக்ஸ் : 011 2160691
முகவரி : 22/13 1/1,
சமன் உயன, தபஹேன வீதி,
மாஹரகம.

## அரசு ஆட்டம் காண்கிறது

புதிய ஆண்டில் நல்லாட்சி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சிக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் இடையில் முரண்பாடுகளும் கோஸ்டி சண்டைகளும் வெளிச்சத்திற்கு வர ஆரம்பித்துள்ளன. அரசுக்கு ஆட்டம் காணும் நிலையே உருவாகி வருகிறது.


சிறுபான்மை இன மக்கள் தங்கள் பிரச்சினைகளுக்கு புதிய நல்லாட்சி அரசாங்கம் தீர்வு காணும் என்ற நம்பிக்கை கொண்டிருந்தார்கள். தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு உட்பட சிறுபான்மை இன மக்கள் தீர்வு காண்பது தொடர்பில் நல்லாட்சி அரசாங்கமும் உறுதி மொழி வழங்கியிருந்தது. ஆனால் அரசினால் 2 வருடங்களை கடந்தும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு காணப்படவில்லை.


இதே போல யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் எதிர் நோக்கும் பாரிய பிரச்சினைகளுக்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை. காணாமல் போனோர் விவகாரம் தொடர்பில் தீர்க்கமான திட்டமிட்ட ஒரு முடிவும் எடுக்கப்படவில்லை. மக்களின் மீள்குடியேற்ற விவகாரமும் இன்னமும் முறையாக நிறைவேற்றப்படவில்லை.

அதுமாத்திரமல்ல, அரசியல் கைதிகள் விவகாரத்திலும் இழுத்தடிப்பே காணப்படுகின்றது. வடக்கு, கிழக்கில் 90 ஆயிரம் பெண்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளனர். 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர்கள் அநாதைகளாக்கப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கில் அங்கவீனர்கள் உள்ளனர். இவ்வாறு பாதிப்புக்குள்ளானவர்களுக்கு வாழ்வாதார உதவிகள் பூரணமாக வழங்கப்படவில்லை.

நல்லாட்சி அரசாங்கத்தைப் பலப்படுத்த சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். இல்லாவிடில் 2017-ல் அரசுக்கு ஆபத்தான ஆண்டாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டின் தலைமைப் பொறுப்பை வகிக்கும் ஜனாதிபதியும், பிரதமரும் சரியான திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்பதை எடுத்து கூற விரும்புகின்றோம்.

**- ஆசிரியர் -**





# இயற்கை வளங்களை தாரைவார்க்கும் கொள்கையை தோற்கடிப்போம்

நமது நாட்டில் பெறுமதிமிக்க வளங்கள் அனைத்தையும் விற்கின்ற கொள்கையை முன்னெடுத்து வரும் ஐ.தே.க வின் கொள்கையானது நாட்டிற்கும், நாட்டின் எதிர்காலத்திற்கும் பாரிய அச்சுறுத்தலாகும்.

1988 இல் நாட்டு வளங்களை விற்பதை ஆரம்பித்த ஐதேக நாட்டு வளங்களை விற்பதன் மூலம் நாட்டை கட்டியெழுப்புவதற்கு முடியுமென அப்போது தெரிவித்தனர். ஆனால் அன்று தோன்றிய பாரிய மக்கள் எதிர்ப்பின் காரணமாக தற்காலிகமாக கைவிடப்பட்டது.

அதன் பின்னர் மக்கள் மயம் எனும் பெயரில் விற்பனையை ஆரம்பித்தனர். பத்திரிகை விளம்பரங்களில் “அதில் ஒரு பங்கு உங்களுக்கும் உண்டு” என விளம்பரம் செய்தனர். ஆனால் மக்கள் மயமாக்கல் மூலமாக நாட்டுக்கோ மக்ளுக்கோ கிடைத்த நன்மைகள் ஏதுவும் கிடையாது. தற்போது அதே விடயத்தை புதிய வடிவில் கொண்டு வந்துள்ளது. அவை, தனியார் அரச - ஒருங்கிணைப்பு எனும் பெயரில் நாடடின் இயற்கை வளங்களை தனியாருக்குத் தாரைவார்க்கும் கொள்கையாகும்.

அரசாங்கத்தின் ஏலப்பட்டியலில் முதலிடம் பிடித்திருப்பது அம்பாந்தோட்டை துறைமுகமாகும். புவியியல் ரீதியாக பார்க்கின்றபோது, அம்பாந்தோட்டை துறைமுகம் நமக்கு முக்கியிமானதோர் துறைமுகமாகும். முதலில் இதை அமைப்பதற்கான நடவடிக்கைகளை சந்திரிக்காவின் அரசாங்கமே தீர்மானித்தது, அப்போது கப்பல்களுக்கு எரிபொருள் வழங்கல், நீர், உணவு, போன்ற சேவைகளை வழங்கும் துறைமுகமாக மாற்றுவதே அப்போதைய நோக்கமாக இருந்தது. ஆனால் ராஜபக்ஷ அரசாங்கம் அத்திட்டத்தை மாற்றி பொருட்களை ஏற்றி இறக்கும் துறைமுகமாக மாற்றியது. இப்போது அம்பாந்தோட்டை துறைமுகத்தை விற்பதற்காக இரண்டு காரணங்களை அரசாங்கம் முன்வைக்கிறது.

ஒன்று துறைமுகத்துக்கு கப்பல் வருவதில்லை. இரண்டாவதாக கடன் சுமை, ஏதாவதொரு துறைமுகத்துக்கு கப்பல்கள் வரும்போது, துறைமுகம் யாருக்குச் சொந்தம் என்ற விடயத்தை அவர்கள் கவனத்தில் கொள்வதில்லை. துறைமுகத்தை விற்பதன் மூலம் கப்பல்கள் வராமைக்கான தீர்வும் கிடைக்கப் போவதுமில்லை. ஆனால், துற்றமுகத்தை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ், வைத்துக்கொண்டு சேவை வழங்கும் மையமாக மாற்றி முன்னேற்றலாம். அதன் மூலமாக பெரும் இலாபத்தையும் ஈட்டலாம்.

அவ்வாறான வாய்ப்பு இருக்கின்ற போதுதான் இதனை விற்கப் போகின்றார்கள். கடனிலிருந்து மீள்வதாகக் கூறி 1200 டொலர் பில்லியனுக்கு சீன கம்பனிக்கு கையளிக்கப்படவுள்ளது. 1200 டொலர் பில்லியனில் அரசாங்கம் குருணாகலையிலிருந்து ஹபரணைக்கு 970 டொலர் பில்லியன் செலவில் ரயில் பாதை அமைக்கப் போவதாக கூறுகிறது. ரயில் பாதை அமைப்பதன் மூலம் கடன் சுமை தீரப்போவதில்லை. அடுத்து இதிலுள்ள பாதகமான விடயம் என்னவெனில் 99 வருட குத்தகையாகும். 2115 ஆம் ஆண்டு வரையில் அம்பாந்தோட்டை துறைமுகம் சீன கம்பனிக்குச் சொந்தமாக போகிறது. 2115 ஆம் ஆண்டு இதனை வாங்கிய சீனரும் இருக்கப் போவதில்லை. கொடுத்த ரணிலும் இல்லை. இதனை எழுதும் நானும் இல்லை. இதனை வாசிக்கின்ற நீங்களும் இல்லை.

அதாவது, கொடுத்தால் கொடுத்தது தான். இதைக் கையளிக்கப்பதன் மூலமாக சீன கம்பனிக்கு 80 வீதமும் அரசாங்கத்திற்கு 20 வீதமும் கிடைக்கும். அதாவது 15 வருடங்களுக்கு இதன் இலாபம் அரசாங்கத்துக்கு கிடைக்கப் போவதில்லை. அதேபோன்று 15 வருடத்துக்கு வரிவிலக்களிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆகவே தற்போதைய ரணில் - மைத்திரி அரசாங்கம் அன்றாட வாழ்க்கையை கொண்டுச் செல்வதற்காக நாட்டு மக்களுக்குச் சொந்தமான வளங்களை விற்றுத் தீர்ப்பதற்குத் தீர்மானித்துள்ளனர்.

அதுமட்டுமல்ல, அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு அருகில் 15 ஆயிரம் ஏக்கர் காணியை சீன கம்பனிக்குத் தாரைவார்க்கப் போகின்றது. நமது நாட்டில் 17 வர்த்தக வலயங்கள் உள்ளன. கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயம் 192 ஏக்கர், கொக்கலை வர்த்தக வலயம் 195 ஏக்கர் மொத்தமாக 17 வலயங்களை எடுத்துக்கொண்டால் 2000 ஏக்கருக்கு குறைவு. அதேவேளை, இந்தியா போன்ற பெரியநாட்டில் மிகப் பெரிய சுதந்திர வர்த்தக வலயமாக இந்தியாவின் ஸ்ரீ-சிட்டியின் மொத்தப் பரப்பளவு 7000 ஏக்கராகும். அப்படி இருக்கும்போது, நமது நாட்டுக்குச் சொந்தமான 15000 ஏக்கர் காணியை சீனக் கம்பனிக்கு தாரைவார்ப்பது ஏன்? இந்தக் காணிகள் எமது மூதாதையர்களின் எலும்புக் கூடுகளால் உரமான பூமியாகும். அதேபோன்று அவர்களின் வியர்வையால் இந்தப் பூமி வளமடைந்துள்ளது.

அப்படியான பூமியை சீனக் கம்பனிக்கு தாரைவார்ப்பதற்கு இடமளிப்பதா? கொழும்பு நகரைப் போன்று 1/10 இல் ஒரு பகுதியை இவ்விதமான தனியார் கம்பனிக்கு தாரைவார்க்கப் போவது கொக்கல, கட்டுநாயக்க, பியகம ஆகிய பகுதிகளில் பெருந்தொகையான காணிகள் எஞ்சியுள்ள போதே, இவ்வாறு அம்பாந்தோட்டை காணியை தாரைவார்க்கின்றனர்.

அது மட்டுமல்ல கற்பிட்டிப் பிரதேசத்துக்கு அருகில் 14 தீவுகள் உள்ளன. மஹிந்த ராஜபக்ஸ அரசாங்கம் இவைகளை விற்றுத் தீர்க்க முயன்றபோதிலும், அவர்களால் இரண்டு தீவுகளை மட்டுமே விற்க முடிந்தது. ஆனால் தற்போதைய அரசாங்கம் சுற்றுலாத்துறையை முன்னேற்றுவதாக கூறி ஏனைய 12 தீவுகளையும் தாரைவார்க்கப் போகிறது. பிரதேச செயலகத்துக்குச் சொந்தமாகவுள்ள இந்தக் காணிகளை, இப்போதும் சுற்றுலா சபை கையேற்றுள்ளது. நாட்டுக்குச் சொந்தமான தீவுகளையும் விற்றுத் தீர்க்கும் நிலைக்கு இந்த அரசாங்கம் வீழ்ந்துள்ளது.

அதுமட்டுமல்ல, உலக துறைமுக வரிசையில் 26 ஆவது இடத்தை வகிக்கின்ற கொழும்புத் துறைமுகத்தையும் விற்பதற்கு இந்த அரசாங்கம் திட்டமிட்டு வருகிறது. இந்தியாவில் இருக்கும் பெரிய துறைமுகங்களை விட உயர் நியையில் உள்ள கொழும்புத் துறைமுகமானது கிழக்கு இறங்குதுறையை 18 மீற்றர் ஆழமாக்கி நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது. இப்போது உலகில் உள்ள பெரிய கப்பல்களை மீள் கப்பலேற்றல் நடவடிக்கைகளை கிழக்கு இறங்குத்துறையால் மேற்கொள்ள முடியுமான நிலை இருக்கிறது. இதன் மூலம் அரசாங்கத்திற்கு பாரிய இலாபத்தை ஈட்டவும் முடியும். அதையே இப்போது தனியார் கம்பனிக்கு தாரைவார்க்கப் போகிறது. அதில் 15 வீதம் அரசாங்கத்துக்கும் 85 வீதம் தனியார் கம்பனிக்கும் சொந்தமாகும் விதத்தில் 35 வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்குவதற்காக ஏலத்தில் விடப்பட்டுள்ளது.

12»

**இந்திரஜித்**

# விற்பனை பண்டமாகி வரும் பெருந்தோட்டக் காணிகள்





**பெருந்தோட்டக் காணிகளை விற்பனை செய்யும் நடவடிக்கைகளில் சில நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன. இதற்கான விளம்பரங்களும் வெளியாகி இருக்கின்றன. இந்நிலைமை மோசமானதாகும். பெருந்தோட்டக் கம்பனிகளும் தோட்டக் காணிகளை விரைவில் விற்பனை செய்வதற்கான செயற்பாடுகளில் ஈடுபடக்கூடும். வெளிநாட்டினருக்கு இவர்கள் விற்கமாட்டார்கள் என்பதற்கு எந்த விதமான உத்தரவாதமும் கிடையாது. தோட்டத் தொழிலாளர்களுக்கு காணிகளைப் பிரித்துக் கொடுக்கும் பட்சத்தில் சுமார் 15 ஆயிரம் தொடக்கம் இருபதாயிரம் வரையான ஹெக்டெயர் காணிகளையே பிரித்துக்கொடுக்க வேண்டிவரும். இது தேயிலைப் பரப்பில் பெரியதொரு தாக்கத்தினை ஏற்படுத்தமாட்டாது. எனவே வீடமைப்பு தொடர்பில் கவனம் செலுத்துகின்ற அதேவேளை தொழிலாளர்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக தேயிலைக் காணிகளை பிரித்துக்கொடுக்கும் நடவடிக்கை தொடர்பிலும் மலையக அரசியல்வாதிகளும் கொள்கை வகுப்பாளர்களும் கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு திறந்தப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஏ.எஸ். சந்திரபோஸ் தெரிவித்தார்.**

தோட்டத் தொழிலாளர்களின் சமகால பொருளாதார நிமைமைகள் தொடர்பில் கருத்து வினவியபோதே அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைமைகள் இன்னும் முன்னேற்றகரமானதாக இல்லை என்பது யாவரும் அறிந்த விடயமாகும். சாண் ஏறினால் முழம் சறுக்கும் நிலையிலேயே இம்மக்களின் போக்குகள் அமைந்துள்ளன. பல்துறை அபிவிருத்திகளையும் ஏற்படுத்த வேண்டிய தேவைப்பாடு காணப்படுகின்றது. இவர்களின் வீட்டுரிமை, காணியுரிமை என்பன குறித்து தற்போது அதிகமாக பேசப்பட்டு வருகின்றது. ஏழு பேர்ச்சஸ் காணியில் வீடமைக்கும் திட்டம் இப்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. குறிப்பிட்ட காலப்பகுதியில் ஆயிரக் கணக்கான வீடுகளை அமைப்பது தொடர்பிலும் விசேட வேலைத் திட்டங்கள் முன்வைக்கப்பட்ட காலப்பகுதியில் ஆயிரக்கணக்கான வீடுகளை அமைப்பது தொடர்பிலும் விசேட வேலைத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இது சிறந்ததே எனினும் தொழிலாளர்களின் வாழ்வாதார மேம்பாடு கருதி வீட்டைச் சூழ உள்ள இருபது பேர்ச்சஸ் காணியினை இவர்களுக்கு வழங்க வேண்டிய தேவைப்பாடும் காணப்படுகின்றது.

தோட்டத் தொழிலளர்களின் வாழ்வாதாரம் இன்று பின்தங்கிய நிலையில் உள்ளது. பொருளாதார சிக்கல்களுக்கு இவர்கள் முகம் கொடுத்து வருகின்றார்கள். இந்நிலையில் பெருந்தோட்டக் கம்பனிகளும் வாழ்வாதார நிலைமைகளை கண்டுகொள்வதாக இல்லை. 1992 இல் கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட காணிகளில் சுமார் 35 ஆயிரம் ஹெக்டெயர் காணிகளை கம்பனியினர் உருவாக்கியுள்ளனர். மிகுதியாக உள்ள காணிகளில் மாதத்திற்கு 25 நாட்கள் வேலை வழங்குவதற்கு எந்தக் கம்பனியும் தயாராக இல்லை. கம்பனியினர் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு எந்தவிதமான நடவடிக்கையினையும் மேற்கொள்ளவில்லை. எனினும் கம்பனியினர் இதனை ஏற்றுக்கொள்வதற்கும் தயாராக இல்லை. தோட்டத் தொழிலாளர்களுக்கு தனிவீடுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டு வருகின்றமை மகிழ்ச்சிக்குரியதே. எனினும் இம்மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கும் வித்திடுதல் வேண்டும்.

வாழ்வாதார மேம்பாட்டுக்கு எத்தகைய மாற்றுச் செயன்முறைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது தொடர்பில் உரியவர்கள் திட்டங்களை முன்வைக்கவேண்டும். இதற்குரிய அழுத்தங்களை கொள்கைத் திட்டமிடலாளர்களுக்கு வழங்குதல் வேண்டும். வீட்டைச் சூழவுள்ள 20 பேர்ச்சஸ் தேயிலைக் காணிகளை வழங்கும் போது சிறு தோட்ட உரிமையாளர்களைப் போன்று தொழிலாளர்கள் வருமானத்தை பெற்றுக்கொள்ளக்கூடிய நிலைமை உருவாகும். மேலும் மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு மற்றும் கைத்தொழில் ரீதியான நடவடிக்கைகளிலும் தொழிலாளர்கள் ஈடுபாடு காட்ட முடியும். கிராம மக்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். இதுபோன்றே தொழிலாளர்களும் கரிசனையுடன் நடந்துகொள்ள வேண்டும்.

பெருந்தோட்டக் காணிகளை விற்பனை செய்யும் நடவடிக்கைகளில் சில நிறுவனங்கள் இடம்பெற்று வருகின்றன. இதற்கான விளம்பரங்களும் வெளியாகி இருக்கின்றன. இந்நிலைமை மோசமானதாகும். பெருந்தோட்டக் கம்பனிகளும் தோட்டக்காணிகளை விரைவில் விற்பனை செய்வதற்கான செயற்பாடுகளில் ஈடுபடக்கூடும். வெளியாருக்கு இவர்கள் விற்கமாட்டார்கள் என்பதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் கிடையாது. தோட்டத் தொழிலாளர்களுக்கு காணிகளை பிரித்துக் கொடுக்கும் பட்சத்தில் சுமார் 15 ஆயிரம் தொடக்கம் இருபதாயிரம் வரையான ஹெக்டெயர் காணிகளையே பிரித்துக்கொடுக்க வேண்டிவரும். இது தேயிலைப் பரப்பில் பெரியதொரு தாக்கத்தினை ஏற்படுத்தமாட்டாது. எனவே வீடமைப்பு தொடர்பில் கவனம் செலுத்துகின்ற அதேவேளை தொழிலாளர்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக தேயிலைக் காணிகளை பிரித்துக்கொடுக்கும் நடவடிக்கை தொடர்பிலும் மலையக அரசியல்வாதிகளும் கொள்கை வகுப்பாளர்களும் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

# மலையக அரசியல்வாதிகளின் தொழிற்சங்க அங்கத்துவ வேட்டையின் பின்னணி


தேர்தல் காலங்களில் அரச சொத்துக்களைப் பயன்படுத்தக் கூடாது என்பதுபோல், பொதுமக்களுக்கான அபிவிருத்தி திட்டங்களில் அரசியல் கட்சியின் வளர்ச்சிக்கும், அக்கட்சியின் தொழிற்சங்க வளர்ச்சிக்கும் பயன்படுத்துவது மன்னிக்கமுடியாத குற்றமாகும். பெருந்தோட்டத் தொழிளாலர்களுக்கான அபிவிருத்தி வேலைகள் பல வழிகளில் முடக்கப்பட்டு இருக்கும் வேளையில் தற்போதைய அரசாங்கம் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கென வீடு அமைப்புத் திட்டத்திற்கு நிதியினை ஒதுக்கியது.

இத்திட்டம் முழு மலையக தொழிலாளர்களுக்கும் போதுமானதாக இல்லாவிட்டாலும், ஒரு ஆரம்ப அபிவிருத்தித் திட்டமாக இதனை நாம் கருதலாம். இத்திட்டம் சிறிய பிரிவினருக்கு மட்டுமே போதுமானதாக இருக்கும் இவ்வேளையில், அரசு சார்ந்த கட்சிகள் (மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும்) குறிப்பாக இத்திட்டங்களை அமுல் படுத்துவதற்கு பொறுப்பானவர்கள், பல்வேறு மலையக பிரதேசங்களில் தொழிளாலர்களை இத்திட்டத்தைக் காட்டி அச்சுறுத்தி தொழிற்சங்கத்தில் இணையுமாறு பலவந்தப்படுத்தியமைக்குப் பல ஆதாரங்கள் உள்ளன. தொழிலாளர்கள் தாம் விரும்பும் தொழிற்சங்கத்தில் இணையும் உரிமையை இவர்கள் பறித்துள்ளனர்.

குறிப்பாக மஸ்கெலிய பிரதேசத்தில், தெனியாய பிரதேசத்திலும் இந்த அடாவடித்தனம் டிசம்பர் மாதம் தொழிற்சங்கத்திற்கு அங்கத்தவர்களைச் சேர்க்கும் காலத்தில் தலைவிரித்தாடியது. தங்களுடைய தொழிற்சங்கத்திற்கு சேர்பவர்களுக்கு மட்டுமே வீடுகள் கட்டித்தரப்படும் என்ற பிரச்சாரத்தை வெளிப்படையாகக்கொண்டு மஸ்கெலிய பிரதேசத்தில் செயற்பட்டு வந்தனர். தெனியாய பிரதேசத்தில் மாகாணசபை அதிகாரங்களைப் பயன்படுத்தி பொருட்களை வழங்கி சங்கத்திற்கு அங்கத்தவர்கள் சேர்க்கப்பட்டனர். நல்லிணக்கத்தை ஏற்படுத்த முயற்சி செய்துக்கொண்டிருக்கும் இவ்வரசாங்கம், குறிப்பாக தற்போதைய ஜனாதிபதி பொதுமக்களின் அபிவிருத்தி வேலைகளை கட்சி வேலைக்காகவும், கட்சி சார்ந்த தொழிற்சங்க வேலைக்காகவும் பயன்படுத்துவதை அனுமதிப்பாரா? மலையகத் தொழிலாளர் தாமாக சிந்தித்து செயற்பட தடைக்கல்லாக இருக்கும் விசக் கிருமிகளை இல்லாது ஒழிப்பது அரசின் கடமை அல்லவா? அரசினுடைய ஒவ்வொரு அபிவிருத் திட்டங்கள் வெவ்வேறு அமைச்சுக்கூடாகவே அமுல்படுத்தப்படுகின்றது. இவ் அமைச்சுகளை சார்ந்த அமைச்சர்களுடைய பொறுப்பானது, சகல அபிவிருத்தி திட்டங்களும் ஒவ்வொரு பிரஜையையும் சென்றடைந்துள்ளதா? சகல மக்களும் அதில் பயன் அடைந்தார்களா? என்பதை ஊர்ஜிதப்படுத்துவதாகும். இதைவிடுத்து இவ் அமைச்சர்கள் தங்கள் கட்சிகளை வளர்பதற்காகவும், கட்சி சார்ந்த தொழிற்சங்கத்தை வளர்பதற்காகவும், அரச சொத்துக்களையும், அபிவிருத்தி திட்டங்களையும் பயன்படுத்துவது மக்களுக்கிடையே முரண்பாட்டை ஏற்படுத்தும் விடயமாகும்.

நிலையான சமாதானத்தை நிலைநிறுத்தும் இக்காலக்கட்டத்தில் அரசுக்கு உள்ளே இருந்து கொண்டு தொழிலாளர்கள் மத்தியில் முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் இவ்வகையான செயற்பாடுகளானது, அரச அதிகாரத்தை துஸ்பிரயோகம் செய்வதாக நாம் கருத்திற்கொள்ளலாம்.

செங்கொடி சங்கம் இவ்வகையான ஊழல் மோசடிகளை வன்மையாகக் கண்டிப்பதுடன் இதை நிறுத்துவதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு அரசிடம் கோருகின்றது.



**மேனகா கந்தசாமி**
பொதுசெயலாளர்
இலங்கை தொழிலாளர் செங்கொடி சங்கம்

நேர்காணல்

# இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதே அடிப்படை நோக்கம்



**மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் காப்பாளரும், பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பின் ஸ்தாபகருமான ஷெரின் அப்துல் சரூர் அவர்களுடனான நேர்காணல்**

**கேள்வி:- உங்களது அமைப்பைப் பற்றி கூறினால்**

**பதில்:-** எமது அமைப்பான பெண்கள் வலையமைப்பில் வடக்கு, கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த 11 சங்கங்கள் இணைந்திருக்கின்றன. எமது அமைப்பு பெண்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் வன்முறைக்கு எதிராக குறிப்பாக சிறுபான்மை இனப் பெண்களை பிரதிநிதித்துவம் செய்து அவர்களுடைய உரிமைகளுக்காக போராடும் அமைப்பாகும். வடக்கு, கிழக்கை அடிப்படையாகக் கொண்டாலும் இப்போது நாங்கள் மலையகம் உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் பெண்களின் உரிமைகளுக்காகச் செயற்படுகின்றோம்.

**கேள்வி:- எமது நாட்டில் தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புவது இன்றியமையாத செயற்பாடாகக் காண்கிறோம், இது தொடர்பாக உங்கள் அமைப்பு என்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளீர்கள்?**

**பதில்:-** எமது அடிப்படை நோக்கம் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது ஆகும். அதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். குறிப்பாக எமது அமைப்பை நாம் அமைப்பதே யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் பெண்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கேயாகும். எனவே தமிழ், முஸ்லிம் பெண்களுக்கிடையே நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதும் அவர்கள் முகம் கொடுக்கும் அநீதிகளுக்கு எதிராகவும் செயற்படுகிறோம். அதேபோன்று நாம் இப்போது தென்பகுதியில் சிங்களப் பெண்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் குரலெழுப்பி வருகிறோம். அதேபோன்று முதலில் சிறுபான்மை இனத்தவர்கள் ஒன்றிணைய வேண்டும் என்றே நாம் கருதுகின்றோம். ஒன்றிணைய வேண்டும் என்றே நாம் கருதுகின்றோம். ஏனென்றால் அப்போது தான் தேசிய இனப்பிரச்சினைக்குக் கூட ஒரு நிரந்திரத் தீர்வை பெற்றுக் கொள்ளும் வாய்ப்புக் கிடைக்கும். மறுபுறம் இன்று ஒவ்வொரு திசையில் மேலோங்கிவரும் இனவாத, மதவாத, தீவிரவாத போக்குகளிலிருந்து அனைத்து இனப் பெண்களையும் மீட்டு ஒரு தளத்துக்கு கொண்டு வரும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். ஏனென்றால் நாம் ஒரு காலகட்டத்தில் இனவாதத்துக்கு இரையாகி சொல்லொணாத் துயரங்களை சந்தித்தோம். தற்போது அதிதீவிரவாத, மதவாத, அடிப்படைவாதம் தலைதூக்கி வருகின்றது. இவற்றை தோற்கடிப்பது கட்டாயத் தேவையாகும்.

**கேள்வி:- இன்றைய கூட்டரசாங்கம் தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளை பாதுகாப்பதாகக் கூறியே பதவியேற்றது. அது நிறைவேற்றப்பட்டுள்ளதா?**

**பதில்:-** புதிய அரசாங்கம் பதவியேற்று கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் பூர்த்தியாகின்றது. இந்த அரசாங்கத்தை அமைப்பதற்கு மூலகாரணம் சிறுபான்மை மக்கள் என்பது உண்மை, மறுபுறம் தேர்தல் காலத்து விளம்பரங்களை அவதானித்தல் அவற்றுள் பெண்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளை அதிகளவாக பயன்படுத்தியிருந்தார்கள். ஆனால் இதுவரை காலமும் இப்பிரச்சினைகளுக்கு ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கையும் எடுத்துள்ளதாக கூற முடியாது. ஆனால் வெளிநாடுகளின் அழுத்தம் காரணமாகவும், G.S.P + போன்ற பொருளாதார நோக்கங்களை கருத்தில் கொண்டு இந்த அரசு இடைமாற்று கால நீதி என்று சொல்லப்படுகின்ற பொறிமுறைகளை எடுத்து வருகிறது. 2015ம் ஆண்டு ஐ.நா. சபையில் பாதிக்கப்பட்ட மக்களை நேரடியாகச் சந்தித்து அவர்களது நிலையை அறிய சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டுமென வலியுறுத்தியது இந்த அரசு அதற்கான குழுக்களை அமைத்தது. எமது அமைப்பைச் சேர்ந்த அங்கத்தவர்களும் பல மாவட்டங்களில் இருந்தார்கள். ஆனால் வெறுமனே ஒரு கடப்பாட்டுக்கு மட்டும் இவர்கள் அவ்வாறு நடந்து கொண்டார்களா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. இப்பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதியும், பிரதமரும் அவர்களுடைய நிலைப்பாட்டை நேரடியாகக் கூறவில்லை. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு துரிதமாக பல்வேறு செயற்திட்டங்களை செய்ய வேண்டியிருந்தாலும் அரசு அந்தளவிற்கு செயற்படுவதைக் காணமுடியவில்லை. எனவே அரசின் இந்த நிலை அதிதீவிர தமிழ் இனவாதிகளுக்குச் சாதகமாக அமைந்துள்ளது.

**கேள்வி:- இன்று யாப்பு சீர்த்திருத்தம் தொடர்பாக அரச செயற்படுகின்றது. யாப்பு சீர்த்திருத்தத்தின் ஊடாக சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்குமா?**

**பதில்:-** யாப்பு சீர்திருத்தம் மீண்டும் யுத்தமொன்றுக்கு வழிவகுக்காத வகையில் அமைய வேண்டும் என்று நம்புகிறோம். அவ்வாறான முக்கியமானதொரு யாப்பு சீர்திருத்தம் கூட இன்று தெரிவுக்குழுவில் பல்வேறு இழுபறிகளைச் சந்தித்து வருகின்றது. சிறுபான்மை மக்கள் பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதியும், பிரதமரும் பகிரங்கமாக எந்தக் கருத்தையும் கூறவில்லை. கூறினாலும் அவர்களுக்கிடையில் முரண்பாடுகளையே காண்கிறோம். எனவே சிறுபான்மை மக்கள் சந்தேகத்துடனே இருக்கிறார்கள். வடபகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை எடுத்துக் கொண்டால் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு வறுமைக் கோட்டின் கீழேயே வாழ்கிறார்கள். வடக்கிலும், கிழக்கிலும் பெண்களை முதன்மையாகக் கொண்ட 89000 குடும்பங்கள் இருக்கின்றன. இவர்களுள் கணிசமானோர் வறுமைக் கோட்டின் கீழேயே வாழ்கின்றார்கள். யுத்தத்துக்கு பின்பு ஆக அடிமட்டத்திலிருந்தே வாழ்க்கையை ஆரம்பிக்கின்றார்கள் இவர்களுக்காக எதுவித தீர்வும் இந்த அரசோ, ஜனாதிபதியோ மேற்கொள்ளவில்லை. இது மிகவும் கவலைகரமான நிலையாகும்.

**கேள்வி:- முஸ்லிம் பெண்களின் விவாக விவாகரத்து சட்டம் தொடர்பாகவும் அதுபற்றிய விரிசல்கள் பற்றியும் சில கருத்துக்களை அவதானித்தோம் இது பற்றி விளக்கினால்?**

**பதில்:-** பெண்கள் வலையமைப்பு ஒன்றியமான எமது அமைப்பே முதன் முதலாக முஸ்லிம் பெண்கள் முகம்கொடுக்கும் ஆதங்கங்களை வெளியிடுவதற்கு ஒவ்வொரு மாவட்டங்களிலும் குறிப்பாக புத்தளம் மாவட்டத்தில் முன்னின்று செயற்பட்டோம். அப்பெண்களின் வேண்டுகோளுக்கு இணங்க அடிப்படை மனித உரிமை உப குழுவிடம் சென்று கருத்துக்களை வெளியிட்டோம். சிறுவயதில் திருமணமுடித்து குழந்தைகளைப் பெற்ற குடும்பப் பெண்களை அவ்விடங்களுக்குக் கூட்டிச் சென்றோம். முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டம் குரானுடன் சம்பந்தப்பட்டதாகவும், முகம்மது நபி அவர்களுடன் சம்பந்தப்பட்டதால் இவற்றை தொடக்கூடாதுதென்று ஆணாதிக்கம் கொண்ட முஸ்லிம் அமைப்புகளும், முஸ்லிம் அரசியல்வாதிகளும் மனித உரிமை உப குழுவிடம் கூறியிருந்தார்கள். எனவே நாங்களும் அதில் உள்ள தவறுகளை எடுத்து கூறினோம்.

மட்டக்களப்பிலும், அம்பாறையிலும் நாம் மேற்கொண்ட ஆய்வுகளுக்கு இணங்க 2015ம் ஆண்டு அங்குள்ள ஒரு பிரிவில் மட்டும் 143 பெண்கள் குறைந்த வயதில் திருமணமுடித்திருந்தார்கள். எமது அரசியல் யாப்பில் 363வது சரத்து 16-18 வயதுக்கு இடைப்பட்ட பெண்களுடன் பாலுறவில் ஈடுபடுவது சட்டவிரோதமென்று குறிப்பிடுகின்றது. 12 வயதுக்கு குறைந்த பெண் பிள்ளைகளை மணமுடிக்க வேண்டுமானால் காதியாரிடம் கேட்கவேண்டுமென்று குறிப்பிடுகின்றார்கள். அதாவது காதியார் விரும்பினால் பெற்ற குழந்தைகூட மணமுடிக்க இடமளிக்கலாம். இது எந்த வகையில் நியாயமாகும். எனவே தான் பெண்களையும் இதில் காதிகளாக நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

சந்திரமோகன்

06»

05» சட்டத்தைப் படித்த, குரானைப் படிக்கக்கூடிய பெண்கள் இருக்கின்றார்கள் அவர்களுக்குக் தேவையான தகுதியிருக்கின்றது. பிரதம நீதியரசராக பெண்ணொருவர் இருந்தார், சிறப்பு நீதிமன்றத்தில், மேல் நீதிமன்றத்தில் பெண்கள் இருக்கின்றார்கள் இவர்களுக்கு அரசாங்கத்தால் சம்பளம் வழங்குவதைப் போன்று தாதிமார்களுக்கும் அரசாங்கமே சம்பளம் வழங்குகின்றது. இதுவும் ஒரு சட்டம் ஆனால் பெண்கள் காதிகளாக வருவதை அகில இலங்கை ஜமாத்துல் அமைப்பு விரும்பவில்லை. ஏனென்றால் முஸ்லிம் ஆண்கள் 4 திருமணங்கள் முடிப்பதை பெண்கள் விசாரிப்பார்கள் அதுவே காரணம்.

**கேள்வி:- இதன் வரலாற்றை விளக்கினால்?**

**பதில்:-** இன்று இந்தோனேசியாவாக அழைக்கும் நாடு அன்று பதாவியா என்றே அழைக்கப்பட்டது. அங்கிருந்து 1951ம் ஆண்டளவிலேயே இச்சட்டம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டது. ஏனென்றால் எமது நாட்டில் முஸ்லிம்களுக்கு விவாக விவாகரத்துச் சட்டமொன்று தேவைப்பட்டது. இன்று இந்தோனேசியாவில் கூட இச்சட்டம் மூன்று முறை மாற்றியமைக்கப்பட்டுள்ளது. பெண்கள் அமைப்புகளின் வேண்டுகோளுக்கிணங்க 100ற்கு மேற்பட்ட பெண்கள் காதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். எமது நாட்டில் அடையாளங்களைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டுமென்றே இவர்கள் வாதாடுகின்றார்கள். இந்த அடையாள அரசியலே முஸ்லிம் பெண்களுக்கு பிரச்சினையாகவுள்ளது. நாம் கோருவது முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்தை முற்றாக நீக்க வேண்டும் என்றல்ல. எமது நாட்டு அரசியல் யாப்புக்கு முதலிடம் வழங்க வேண்டும் என்றே ஆகும்.

எமது யாப்பில் அறிக்கை 16 என்று இருக்கின்றது இதனை எடுத்துவிட்டு அறிக்கை 12 ஐ நடைமுறைபடுத்த வேண்டும் என்றே கேட்கிறோம். அப்போது எல்லா வகையிலும் எமக்கு சமத்துவம் கிடைக்கும் எமக்கு வேண்டிய துறைகளில் பணியாற்றலாம். தேசவளமை சட்டத்திலும் பெண்களுக்கு சீதனமாக கிடைக்கும் பொருட்களை விற்பதற்கு ஆண்களின் கையொப்பம் பெறவேண்டும். எனவே பெண்களின் உரிமை மீறப்படுவதால் இச்சட்டத்தை மாற்றுவதற்கு TNA தலைவர்கள் ஒத்துக்கொண்டார்கள். ஆனால் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் இதனை மாற்றுவதற்கு ஒத்துக்கொள்ளாமல் உள்ளார்கள். எமது நாடு குரான் சார்பான சட்டத்தின் கீழ் இயங்கும் ஒரு நாடல்ல. எனவே எமது நாட்டில் பெண்களுக்கு மதிப்பளிக்க வேண்டும் சமவுரிமை வழங்க வேண்டும். எனவே இந்த முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்தை கட்டாயமாக மாற்றியமைத்தால் மட்டுமே முஸ்லிம் பெண்களுக்கும் உரிமைகள் கிடைக்கும்.

அரசியல் அலசல்

# ரணிலின் திருட்டுத்தனமான மன்னிப்புக் கோரல்



### அரசியல் நிலமைகளும் சூடுபிடித்துவருகின்றது

காலநிலை மட்டுமல்ல எமது நாட்டு அரசியல் நிலவரங்களும் படிப்படியாக சூடுபிடித்துவருகின்றது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியேற்றும் ரணில்-மைத்திரி கூட்டரசாங்கம் அமைத்தும் இரண்டு வருடங்கள் நிறைவடைந்துள்ளது. ஆனால் பொதுமக்கள் எதிர்பார்த்தளவு ஆக்கபூர்வமான தீர்வுகள் ஏதும் வழங்கப்பட்டதாக உணர்வதற்கில்லை. கடன்சுமை அதிகரிப்பு, ரூபாயின் மதிப்பு குறைதல், பெற்றகடன்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் நாட்டின் வளங்களை விற்றல், அம்பாந்தோட்டை துறைமுகத்தையும் அதனை அண்டிய பகுதிகளில் 15000 ஏக்கர் நிலத்தையும் சீனாவிடமும் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு இறங்குதுறையையும் திருகோணமலை எண்ணை குதங்களையும் இந்தியாவுக்குத் தாரை வார்க்க தயாராகவுள்ளது. எயார் லங்கா விமானச் சேவையும் புல்மூட்டை கணிய மணலை விற்பதற்கும் தயாராகவுள்ளது.

நாட்டில் பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகள் தலைதூக்கி வருகின்றது. இவை காரணமாக நாட்டின் அரசின் நிலமை சூடேறி வருகின்றது.

### ஒரே மனித நேயம்

எமது நாட்டில் அரசியல் சூடேறும்போது பொதுமக்களைத் திசைதிருப்புவதற்காக பொதுவாக அரசியல்வாதிகள் ஏதாவதொரு தந்திரரோபயத்தை கடைபிடிக்கின்றார்கள். மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் காலகட்டத்தில் இனவாதத்தையும், மதவாதத்தையும் பரப்பினார்கள்.



பொதுமக்களை திசைத்திருப்புவதற்கு உள்ள மிக இலகுவான செயற்பாடு இதுவாகும். ஆனால் நாம் அதற்கு இடமளிக்கக்கூடாது. தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது இன்றியமையாதாகும். நாட்டின் அரசியல் நிலமைகள் எவ்வளவு சூடேறினாலும் எமக்கிடையே பிரிக்க முடியாதளவுக்கு நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவது அவசியமாகும். இதற்காக வடபகுதி மக்கள் சிறந்ததொரு எடுத்துக்காட்டை செய்திருந்தார்கள். கடந்த மாதம் 18ம் திகதி ஹொரனை பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு பயணித்தவர்கள் சாவகச்சேரியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 11 பேர் உயிரிழந்தனர். அச்சமயத்தில் வடபகுதி மக்கள் பாதிக்கப்பட்ட மக்களின் தங்க நகைகள் பணம் ஆகியவற்றை எந்தவித குறைபாடும் இல்லாமல் தமிழ் இளைஞர்கள் உறவினர்களிடம் கையளித்திருந்தனர் அவர்கள் செயற்பட்ட விதம் குறித்து தென்பகுதி மக்கள் வரவேற்றிருந்தார்கள். இவை தொடர்பாக ஊடகங்களிலும் அவதானித்தோம். தமிழ் மக்கள் தொடர்பாக இதுவரை காலமும் தவறான வகையிலேயே நினைத்திருந்தோம் என பாதிக்கப்பட்ட குடும்பத்தார் கூறியிருந்தார்கள். தமிழ் மக்களின் அர்ப்பணிப்புகள், மனிதத்துவம் தொடர்பாக வரவேற்றிருந்தார்கள். தமிழ், முஸ்லிம், சிங்கள சாதாரண மக்கள் எப்பொழுதும் ஒற்றுமையையும், நல்லிணக்கத்தையும் விரும்புகிறவர்களாகவே உள்ளனர். இதைச் சீர்குழைப்பதற்கு எந்த அரசியல்வாதிக்கும் இடமளிக்கக்கூடாது.

### சுனாமி அனார்த்தம்

சுனாமி அனார்த்தம் இடம் பெற்று 12 வருடங்கள் கடந்து விட்டது. வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்ற வேறுபாடின்றிப் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னமும் இருக்கின்றார்கள். இவர்களது பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்ற உண்மையான எண்ணம் இந்த ஆட்சியாளர்களுக்கில்லை. சுனாமி அனார்த்தத்தை அடிப்படையாகக் கொண்டு இயக்குனர் அசோக்க ஹந்தகம தொலைக்காட்சி நாடகத்தை இயற்றியுள்ளார். இதில் சுனாமி அனார்த்தத்தை அடிப்படையாகக் கொண்டு தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புவது பற்றி வடிவமைத்துள்ளார்.


சுனாமி அனர்த்தத்தையும் தேசிய ஒற்றுமையும் பற்றி பேசும் போது இன்னொரு விடயம் ஞாபகத்துக்கு வந்தது. சாவகச்சேரியில் இடம் பெற்ற விபத்துச் சம்பவம் இனபேதமின்றி இதயத்தைக் கலங்க வைத்துள்ளது. தமிழ் இளைஞர்கள் அந்நேரத்தில் நடந்துக் கொண்ட விதத்தைச் சிங்களப் பத்திரிகைகள் மூலம் சிங்கள மக்களுக்கு தெரியப்படுத்திப் பாராட்டுத் தெரிவித்திருந்தனர். ஆனால் சுனாமி அனார்த்தம் இடம் பெற்ற சமயத்தில் தென்பகுதிளில் சிங்கள இளைஞர்கள் சிங்கள மக்களின் நகைகளை சூறையாடியிருந்தார்கள். முதலாளித்துவ சமுதாயம் இவ்வாறானவர்களையே உருவாக்கியிருக்கிறது. எனவே இந்த முறையை மாற்றியமைப்பதே நாட்டு மக்களின் கடமையாகும்.

### ரணிலின் திருட்டுத்தனமான மன்னிப்புகோரல்

யாழ் நூலகசாலை தீக்கிரையாக்கியது குறித்து மன்னிப்பு கோருவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் பாராளுமன்றத்தில் கூறியிருந்தார். இது பெரும் ஏமாற்றுவித்தையாகும். இது பெரும் பிரச்சாரத்துக்கு மட்டும் செயற்படுத்தியவையாகும். 1981ல் மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தலின்போதே யாழ் நூலகசாலை தீக்கிரையாக்கப்பட்டது. யாழ் மக்களை அச்சுறுத்தும் அடக்குமுறையின் ஆரம்ப கட்டமாக ஐ.தே.க. தலைவர்கள் இதனை செய்தார்கள். அப்போது ரணில் விக்கிரமசிங்க அவர்கள் இளைஞர் மற்றும் தொழில்துறை அமைச்சராக இருந்தார். அவர் அச்சமயத்தில் ஒரு வார்த்தைகளைகூட அதற்கு எதிராக கதைக்கவில்லை. 35 வருடங்களுக்குப் பின்பே மன்னிப்புகோர ஞாபகம் வந்துள்ளது. அதேபோன்று 1988/89 காலகட்டத்தில் பட்டலந்தையில் வதைமுகாமை நடத்தி ஆயிரக்கணக்கான இளைஞர்களையும் கொலை செய்தார். இளைஞர் மற்றும் தொழில்துறை அமைச்சராக இருந்த காலகட்டத்தில் இலவசக்கல்வியை துண்டிப்பதற்கு திட்டம் தீட்டியபோது அதற்கு எதிராக மாணவர்கள் ஊர்வலம் சென்றனர். அந்த ஊர்வலத்திற்கு துப்பாக்கிசூடு நடத்தி இராணுவம அடக்குமுறை செய்தபோது ஒரு வார்த்தைகூடப் பேசாத ரணில் விக்கிரமசிங்க இன்று மக்களை ஏமாற்றுவதற்காக யாழ் நூலகசாலை தீக்கிரையாக்கியது குறித்து மன்னிப்பு கோருகிறார்.

### ருசிகண்ட பூனை மைத்திரி

மைத்திரிபால சிறிசேன அவர்கள் ஜனாதிபதி முறையை ஒழித்துகட்டுவதாகக் கூறியே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார். இதற்கு முன்பு சந்திரிக்காவும் மஹிந்த ராஜபக்ஷவும் இதனையே கூறினார்கள். ஆனால் அவர்கள் ஜனாதிபதி முறையை இரத்து செய்யவில்லை. இப்போது SLFP மத்திய குழுவும் ஜனாதிபதி முறைமை இரத்து செய்வதற்கு எதிராகவுள்ளார்கள். மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி முறையை இரத்து செய்வதாகக் கூறவில்லை என அமைச்சர் பைசர் முஸ்தபா கூறுகிறார். அதாவது மைத்திரிபாலவும் ஜனாதிபதி பதவியின்



ருசி கண்டுவிட்டார். இந்நாட்டின் சிங்கள, தமிழ், முஸ்லிம் சாதாரண மக்களை அடக்குமுறை செய்வதற்கும் ஒற்றுமையைச் சீர்குழைப்பதற்கும் நிறைவேற்று ஜனாதிபதி முறையை பயன்படுத்திக் கொண்டுள்ளனர் என மக்கள் விடுதலை முன்னணி ஆரம்பத்திலிருந்தே கூறிவந்தனர்.

**இந்திரஜித்**




# மகத்தான அக்டோபர் புரட்சி மானுட வரலாற்றின் திருப்புமுனை

## (அக்டோபர் புரட்சிக்கு 100 வயது)

1917 ஆம் ஆண்டு ரஷ்யாவில் போல்ஷெவிக் கட்சி சோசலிச புரட்சியை வெற்றிகரமாக சாதித்ததை மஹாகவி பாரதி மிகச்சரியாகவே யுகப்புரட்சி என்று அழைத்தார். 74 ஆண்டுகள் நிலைத்த இப்புரட்சியின் தொடர்ச்சியாக உருவான சோசலிச சோவியத் ஒன்றியம் பல மாபெரும் சாதனைகள் நிகழ்த்திய போதிலும் எதிர்ப்புரட்சி சக்திகளால் பின்னுக்குத் தள்ளப்பட்டு, 1991 இல் சிதைக்கப்பட்டது. அப்பொழுது சோசலிசம் தோற்றுவிட்டது, இனி உலகம் முழுவதிலும் உள்ள ஆதிக்கம் முதலாளிகளின் கைவசமே இருக்கும் என்று ஏகாதிபத்தியம் கொக்கரித்தது. ஆனால் முதலாளித்துவம் மானுட சமூகம் எதிர்நோக்கும் பிரச்சனைகளை தீர்க்க உதவாது என்பது மட்டுமல்ல, அவற்றை தீவிரப்படுத்தும் என்பதைத்தான் கடந்த 25 ஆண்டுகளின் அனுபவம் காட்டுகிறது.

2007 ஆம் ஆண்டு தொடங்கி இன்று வரை தொடரும் ஆழமான முதலாளித்துவ நெருக்கடி எண்ணற்ற மக்களின் வாழ்க்கை வாய்ப்புகளை மேலை நாடுகளிலும் உலகெங்கிலும் பறித்து வருகிறது. வேலையின்மை, வறுமை, கல்வி மறுப்பு, ஆரோக்கிய உரிமை பறிப்பு என்று துயரம் தொடர்கிறது. வறுமையும் வேலையின்மையும் கல்வி உரிமை மறுப்பும் தவிர்க்க முடியாதவையா? அறிவியலும் தொழில்நுட்பமும் மிகப் பிரம்மாண்டமாக வளர்ந்துள்ள இன்று 100 கோடிக்கும் அதிகமான மக்கள் பட்டினியில் வாட வேண்டுமா? முதலாளித்துவத்தில் நாம் சந்திக்கும் இன்னல்கள் இயற்கையின் விதியா? அல்லது உற்பத்தி அமைப்பின் விதியா?

வீழ்த்தப்பட்ட சோவியத் ஒன்றியத்தின் 70 ஆண்டு வரலாறு வறுமையை ஒழிக்க முடியும், வேலையின்மையை விரட்ட முடியும், அனைவருக்கும் கல்வியும் ஆரோக்கியமும் தர முடியும், பட்டினியற்ற சமூகத்தை நிர்மாணிக்க முடியும் என்பதை நமக்கு எடுத்துரைக்கின்றது. மிகவும் பின்தங்கிய ஜார் கால ரஷ்யாவில் 1917 இல் நிகழ்ந்த சோசலிச புரட்சியை முளையிலேயே கிள்ளி எறிய ஏகாதிபத்திய நாடுகள் ரஷ்யாவுக்குள் துருப்புகளை அனுப்பினர். எதிர்ப்புரட்சியாளர்களுக்கு எல்லா உதவிகளையும் அளித்தனர். இவற்றை முறியடித்து சோசலிச புரட்சி முன்னேறியது. 1918-20 எதிர்ப்புரட்சி கலகம், 1924 இல் லெனின் மறைவு, ஏகாதிபத்திய நாடுகளின் வர்த்தகத் தடைகள், தொழில்நுட்பம் தர மறுப்பு, ஏகாதிபத்தியத்தின் ராணுவ முஸ்தீபுகள், முற்றுகைகள் இவற்றையெல்லாம் எதிர்கொண்டு சோசலிச சோவியத் ஒன்றியம் முன்னேறியது. 1914-18 யுத்தம், எதிர்ப்புரட்சி கலகங்கள் உள்ளிட்ட மேலே சொல்லப்பட்டுள்ள சூழலால் 1928 இல் தான் சோவியத் ஒன்றியத்தின் ரஷ்யப் பகுதியினால் 1913 ஆம் ஆண்டுவரை உற்பத்தி நிலையை மீட்க முடிந்தது. ஆனால் 1940 வரை 12 ஆண்டுகளில் திட்டமிட்ட சோசலிச பொருளாதார வளர்ச்சி மூலம் உலகின் இரண்டாம் பெரும் தொழில் நாடுகளாக வளர்ந்த ஐரோப்பிய நாடுகளை கதிகலங்க வைத்த நாஜிப் படைகளை சோசலிச சோவியத் ஒன்றியம் வீறுகொண்டு எழுந்து ஓட ஓட விரட்டியது.

அனைவருக்கும் வேலை, அனைவருக்கும் கல்வி, அனைவருக்கும் ஆரோக்கியம், பட்டினி என்ற கொடுமையை முற்றிலும் சோவியத் மண்ணிலிருந்து விரட்டியது உள்ளிட்ட பெரும் சாதனைகளை சோசலிச திட்டங்கள் சாதித்தன. காலனி ஆதிக்கச் சுரண்டலில் ஈடுபடாமல், உழைப்பாளி மக்களை முதலாளித்துவ பாணியில் சுரண்டாமல், வளர்ந்த நாடுகளால் தொழில்நுட்பம் மறுக்கப்பட்ட சூழலில், ராணுவ தாக்குதலை முறியடிக்க தன்னை தயார்படுத்திக் கொண்டே, இந்த முன்னேற்றங்களை 30 ஆண்டுகளுக்குள் சோவியத் சோசலிசம் சாதித்தது.

சோவியத் ஒன்றியத்தின் இந்த சாதனைகள், மேலை நாடுகளிலும் பிரதிபலித்தது. அங்கு உழைப்பாளி மக்களுக்கு குறைந்த பட்ச உரிமைகளையும் சலுகைகளையும் கொடுத்தே ஆக வேண்டும் என்ற நெருக்கடியை ஆளும் வர்க்கங்களுக்கு சோவியத் சாதனைகள் ஏற்படுத்தின. ஓய்வூதியம், வேலை இழப்பு காலங்களில் நட்ட ஈட்டு ஊதியம், கல்வி மற்றும் மருத்துவ வசதி போன்றவை முதலாளிகளின் கருணை கொடை அல்ல, உழைப்பாளி மக்களின் போராட்டங்கள் மூலமும், சோசலிச சோவியத் ஒன்றியம் இவற்றை செய்து காட்டியதன் விளைவாகவும் கிடைத்தவை ஆகும். சோசலிச சோவியத் ஒன்றிய சாதனைகள் உலகம் முழுவதிலும் உள்ள உழைப்பாளி மக்களுக்கு உரிமைப் போராட்டங்களை நடத்த உத்வேகம் அளித்தது மட்டுமின்றி காலனி ஆதிக்கத்தில் அடிமைகளாக வாழ்ந்து வந்த மக்களின் தேச விடுதலை இயக்கங்களுக்கும் ஒரு ஆதர்ச சக்தியாக செயல்பட்டது.

இரண்டாம் உலகப் போரில் 2 கோடி மக்களை நாஜிப் படைகளின் கொடிய தாக்குதலுக்கு இழக்க நேர்ந்தாலும், நாஜிசத்தை வீழ்த்தி உலக மக்கள் அனைவரும் சுதந்திரக் காற்றை சுவாசிக்க வழிகோலியது. சோவியத்தின் வலிமையும் மக்கள் சீனப் புரட்சியின் வெற்றியும் பலவீனமடைந்திருந்த ஏகாதிபத்திய நாடுகளை எதிர்த்த தேச விடுதலை இயக்கங்களுக்கு பெரும் வலுவூட்டின.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற வகையில், சோவியத் சோசலிச சாதனைகளுக்கு எடுத்துக்காட்டாக ஒரே ஒரு செய்தியை நாம் பார்ப்போம். 1926 இல் சோவியத் ஒன்றியம் உருவாகிய கால கட்டத்தில் 9 வயது முதல் 49 வயது வரை உள்ளவர்கள் மத்தியில் எழுத்தறிவு பெற்றவர்கள் 56.6 சதவீதமாகும் அடுத்த 13 ஆண்டுகளில் 1939 இல் இந்த விகிதம் 87.4 ஆக உயர்ந்தது. சோவியத் ஒன்றியத்தின் மத்திய ஆசிய குடியரசுகள் 1926 இல் மிகவும் பின் தங்கியிருந்தன. எழுத்தறிவு விகிதம் உஸ்பெகிஸ்தானில் 11.6%, கஜகஸ்தானில் 25.2%. 1939 இல்? இவை முறையே 78.7%, 83.6% என்று அதிகரித்தன. 1959 வரை சோவியத் ஒன்றியத்தின் எழுத்தறிவு விகிதம் 98.5% ஆக உயர்ந்திருந்தது. மேலைநாட்டு முதலாளித்துவங்கள் நூற்றாண்டுகளில் சாதிக்காததை 50 ஆண்டுகளுக்குள்ளாக சோசலிச சோவியத் ஒன்றியம் சாதித்தது.

இரண்டாம் உலகப்போரில் பெரும் இழப்புகளை சோவியத் ஒன்றியம் சந்தித்தது. 70 சதவீத தொழிற்சாலைகள் போரில் அழிந்தன. 2 கோடி மக்கள் இறந்தனர். பல நகரங்கள் தரைமட்டமாக்கப்பட்டிருந்தன. இரண்டாம் உலகப் போர் முடிந்தவுடன் சோசலிசத்திற்கு எதிராக பனிப்போரை அமெரிக்க ஏகாதிபத்தியம் கட்டவிழ்த்துவிட்டது. இருப்பினும் இவற்றையெல்லாம் எதிர்கொண்டு சோவியத் ஒன்றியம் வேகமாக முன்னேறியது. பின்னர் 1970களில் பல பொருளாதாரப் பிரச்சனைகளை சந்திக்க நேர்ந்த போதிலும், சில ஆண்டுகளில் மந்த நிலை ஏற்பட்டாலும், 70 ஆண்டுகால சோவியத் சாதனைகளை மறுக்க முடியாது.

சோசலிச வளர்ச்சியின் முன்னே வந்த சவால்களுக்கு சோசலிச நிலைபாட்டில் நின்று தீர்வு காண சோவியத் தலைமை தவறியதும் ஏகாதிபத்தியத்தின் எதிர் புரட்சியினாலும் 1991 இல் சோவியத் ஒன்றியமும் சோசலிசமும் வீழ்த்தப்படுவதற்கு இட்டுச் சென்றது. எனினும் தனது 70 ஆண்டு வாழ்க்கையில் சோவியத் சோசலிசத்தினால் வறுமையை ஒழிக்க முடிந்தது. வேலையின்மை என்ற கொடிய சமூக அவலத்தை விரட்டி அடிக்க முடிந்தது. பட்டினியை ஒழிக்க முடிந்தது. ஆண்-பெண் சமத்துவத்தை நோக்கி மானுடம் செல்ல முடிந்தது உழைப்பாளி மக்களுக்குப் புதிய கம்பீரமானவாழ்வை தர இயலும் என்று சோவியத் புரட்சி உலகுக்கு வழிகாட்டியது. மீண்டும் ஒரு நாள் சோவியத் மண்ணில் சோசலிசம் மலரும். தனது தவறுகளில் இருந்து படிப்பினைகளைப் பெற்று தன்னைச் சரி செய்து கொண்டு சோசலிசம் வீறு கொண்டு எழும். நாம் வாழும் இன்றைய உலகின் எந்த அடிப்படை பிரச்சனையையும் முதலாளித்துவத்தினால் தீர்க்க இயலாது என்பதை மானுடம் உணர்ந்து வருகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக, நவீன சமூக உற்பத்திக்கு உழைப்பாளி மக்களும் இயற்கை வளங்களும் கருத்தாலும் கரத்தாலும் உழைக்கும் மக்கள் படைத்துள்ள, படைத்து வரும் நவீன அறிவியலும் தொழில்நுட்பமும் தான் தேவை. தனியாக, உடைமை அடிப்படையில், உற்பத்தியை நிர்வகிப்பதாக சொல்லிக் கொண்டு உழைப்பை சுரண்டும் முதலாளி வர்க்கம் அவசியம் இல்லை என்பதை மானுடத்திற்கு உணர்த்திய புரட்சி அக்டோபர் புரட்சி ஆகும். எனவேதான் உலகளவில் முதலாளி வர்க்கம் அதனை பூண்டோடு அழிக்க முயன்றது, இன்றும் அந்த முயற்சி தொடர்கிறது. அது தோற்கடிக்கப்படும் அக்டோபர் புரட்சி விதைத்த சோசலிச கனவுகள் நனவாகும்.

ரமேஸ்

# இன்குலாப் என்ற போராளிக்கவிஞன்

இன்குலாம் என்றழைக்கப்பட்ட போராளிக் கவிஞர் கடந்த நவம்பர் மாத இறுதியில் காலமாகிவிட்டார். இஸ்லாமிய குடும்பத்தில் பிறந்த அவர் அந்த சமுதாயத்தில் உள்ள ஏற்ற தாழ்வுகளையும், பெண்ணடிமைத்தனத்திற்கு எதிராக குரல் கொடுத்து வந்துள்ளார். தனது கவிதைகளில் ஒடுக்கப்பட்ட, உழைக்கும் மக்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்துள்ளார்.

இன்குலாப் பொதுவுடமைக் கொள்கையில் தீவிர பற்றாளர் என்பதால் பாட்டாளி வர்க்கத்தின் கவிஞர் என்ற வகையில் தன் படைப்புகளை வழங்குகிறார்.

“கண்மணி ராஜம்” என்ற கவிதையில் இன்குலாம் தான் பணியாற்றிய புதுக்கல்லூரி இருக்கும் பீட்டர் சாலை அவர் இவ்வாறு அறிமுகப்படுத்துகிறார்.

“பீட்டர் சாலை இங்கே
வானை சுமக்கிற மாளிகை
உண்டு”

என்ற மாளிகை குறித்து அடையாளம் படுத்தும் பொழுது அதனை கட்டியெழுப்பிய உழைப்பாளர்களை எண்ணிப்பார்க்கிறார்.

மாளிகை நிமிர மண்ணைச்சுமக்கும் கூலிகள் அந்தச் சாலையின் ஓரத்தில் கோணிப்பை அடைப்புக்கு குடிசைக்குள் குடும்பம் நடத்தும் கோலங்கள் உண்டு.


மாளிகை உருவாக காரணமான அந்த ஏழைகளின் இன்னல்களை பாடுகிறார்.

அது மாத்திரமல்ல பாமர மக்களின் மீது ஆக்கிரமிப்பு அதிகாரத்தின் மூர்க்கத்தைக் கண்டு அஞ்சாமல் போர் குரல் எழுப்புகிறார். பொறுத்ததுபோதும் இனி பொறுப்பதற்கில்லை என்ற தகைமையோடு

கன்னத்தில் அறையும்
எந்தக் கைக்கும்
மறு கன்னத்தில் அறையும்
வாய்ப்பே இல்லாமல்
அந்தக் கணமே
அறுத்தறியப்படும்

வெட்டப்படுவது
நகங்களல்ல
விரல்கள்
உனது மகுடங்களை
மூழ்கடிப்பதற்கே
வேர்வைத்துளிகள்
வெள்ளமாய் இணைகின்றன

என்ற கோபாவேசக்குரலுக்கு சொந்தக்காரர் கவிஞர் இன்குலா மானுடம் பாடும் போராளிக்கவிஞர் என்பதில் ஐயமில்லை.





இலங்கை வானொலி அறிவிப்பாளரா
பலமுறை தேசிய விருது வென்ற தூவ
நிகழ்ச்சி தொகுப்பாளராக நம் அனை
நன்கு அறியப்பட்ட நாகபூஷணி ஏரா
கலை இலக்கியவாதிகளை நேர்காண
செய்திருக்கிறார். இன்று நாம் அவரை
மகிழ்ச்சியடைகிறோம்.

# கலைச் செல்
# நாகபூஷணி

**கேள்வி:-** நீங்கள் கடந்து வந்த பாதையில் பதிந்த தடம் உங்கள் கலைப்பயணத்தின் சான்றாகும். எங்களோடு அவற்றை பகிர்ந்து கொள்வீகளா?

**பதில்:-** மகிழ்ச்சி மலையக சேவையில் அறிவிப்பாளராக என் பயணம் ஆரம்பித்தது. இலங்கை வானொலியில் கல்விச்சேவை, நிகழ்ச்சி தயாரிப்பாளராக என்னை புடம் போட்டது. அறிவிப்பாளராக, செய்தி வாசிப்பாளராக மூத்த ஒலிபரப்பாளர்களின் பயிற்சி பட்டை தீட்டியது, தொடர்ந்து தொலைக்காட்சி செய்தி, நிகழ்ச்சி தொகுப்பு, மேடை அறிவிப்பு என்று நீளும் எனது பயணத்தில் ஊடகம் தொடர்பான செயலமர்வு, விரிவுரை என நானும் இணைந்து கொள்ளுமளவுக்கு என்னை வளர்த்திருக்கிறது அன்னை வானொலி.

**கேள்வி:-** உங்கள் கல்வி மற்றும் இலக்கிய ஈடுபாடு பற்றி

**பதில்:-** எனது ஆரம்பக்கல்வியை 2 ஆம் வகுப்புவரை கம்பளை பாலிகா கனிஷ்ட வித்தியாலயத்திலும் 5 ஆம் தரம் வரை நாவல் நகர் கதிரேசன் கனிஷ்ட வித்தியாலயத்திலும் கற்றேன். 6-10 வரை நாவல்நகர் பாலிகா மகா வித்தியாலயத்தில் கற்றேன். உயர்தர கலைப் பிரிவில் கதிரேசன் மத்திய கல்லூரியில் கற்று யாழ் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி தமிழில் சிறப்பு பட்டம் பெற்றேன், பின்னர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் இதழியல் டிப்ளோமாவைப் பூர்த்தி செய்தேன். இலக்கியப்பயணம் என் தந்தையோடு ஆரம்பித்தது கதிரேசன் கல்லூரி கலை, இலக்கிய, விளையாட்டு திறமைகளுக்கு களம் தந்து வள மூட்டியது.

**கேள்வி:-** உங்களுக்குக் கிடைத்த விருதுகளும் பட்டங்களும்

**பதில்:-** சிறந்த செய்தி வாசிப்பாளருக்கான விருது, சிறந்த நிகழ்ச்சி தொகுப்பாளருக்கான விருது, மத்திய மாகாணசபை சாகித்திய விருது, கிருஷ்ண கலாலயா விருது மலேசிய சர்வதேச பாடலாசிரியருக்கான போட்டியில் 2ம் இடம் கிடைத்ததையிட்டு மலேசிய நாடு வழங்கிய விருது என்று தொடர்கிறது பட்டியல்.

**கேள்வி:-** முன்பெல்லாம் அநேக விளம்பரங்களில் தோன்றுவீர்கள்

**பதில்:-** தொலைக்காட்சி நாடகங்களில் சந்தர்ப்பம் கிட்டியது நான் தான் ஈடுபாடு காட்டவில்லை.

**கேள்வி:-** மலையக சிறுகதை சிற்பி என்.எஸ்.எம் ராமையாவைப் பற்றி உங்கள் ஆய்வு நூலாக வெளிவர உள்ளதாக அறிகிறேன் யார் அதனை வெளியிட உள்ளார்கள்?

**பதில்:-** ராமையா அவர்களின் “ஒரு கூடை கொழுந்து” சிறுகதைத் தொகுதியை என் ஆய்வுக்கு தெரிவு செய்யும்படி எங்கள் பேராசிரியர் துரை மனோகரன் ஆலோசனை வழங்கினார். இந்த சந்தர்ப்பத்தில் ஆய்வுக்கட்டுரை சிறப்புற உதவிய சகோதரர் சட்டத்தரணி சேனாதிராஜா, எழுத்தாளர் மாத்தளை கார்த்திகேசு, எழுத்தாளர் அந்தனி ஜீவா ஆகியோருக்கு நன்றி கூற விரும்புகிறேன்.

**கேள்வி:-** உங்கள் ஆய்வு நூல் எப்பொழுது வெளிவரும்?

**பதில்:-** அந்தனி ஜீவா அவர்கள் என்னைக் காணும் சந்தர்பங்களிளெல்லாம் எனது ஆய்வுக்கட்டுரை நூலுரு பெற வேண்டும் என வலியுறுத்துவார். எனக்கும் அதில் பூரண விருப்பமும் ஆவலும் இருக்கின்ற நிலையில் மல்லிகைப்பூ சாந்தி திலகர் (திலகராஜ்) அவர்கள் இதைத் தாமே நூலாக்கித்தருவதாக கூறினார் அதற்குரிய வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. விரைவில் புத்தகம் உங்கள் கைகளில் தவழும்.

**கேள்வி:-** ஆரம்பத்தில் நீங்கள் ஆர்வமாக கவிதைத்துறையில் ஈடுபாடு கொண்டிருந்தீர்கள் ஒரு கவிதை தொகுதியையும் வெளியிட்டுள்ளீர்கள்

சிறுகதை

# புயலில் சிக்கிய பெண்

மூலம்
தமிழி
எம்.எ

புயல், வேகமாக அடித்தது, பாதையோரத்தில் இருந்த மரங்கள் நிலத்தை முத்தமிட்டு நிமிர்ந்தன.

அவள் பால்வடியும் கைக்குழந்தையை ஆயாசமாக தூக்கிக் கொண்டாள்.

தெருவில் ஒரு நாய்க் குட்டி கூடக் கிடையாது அவள் மெதுவாக முன்னே நடந்தாள்.

“அவளைத் துண்டு துண்டாக வெட்டிப் போட்டாலும் எங்கட ஆள் ஒருத்தனுக்கல்லாமல் தர மாட்டேண்டா” பல வருடங்களுக்கு முன்னர் தனது தந்தை சொன்னது அவளது காதுகளில் எதிரொலித்தது.

தான் முத்துவுடன் ஓடி வந்த நாளில் அவர் நாட்டிய மாங்கன்று இன்று கிளை பரப்பி செழித்து வளர்ந்து பூத்துக் குழுங்குகிறது. அவள் தலையைத் தூக்கி இறுதியாக ஒரு முறை பார்த்தாள். அது இருளில் மூழ்கியிருந்தது அவள் மீண்டும் தெருவில் நடக்கலானாள்.

அவன் சிகையையும், தாடியையும் வெட்டும்போது எவ்வளவு நேரமானாலும் பார்த்துக் கொண்டு இருக்க முடியும்? எவ்வளவு நேரமான போதும் அவன் அதனை அழகாகவும், நேர்த்தியாகவும் செய்து முடித்து விட்டுத்தான் நிற்பான் ஆனாலும் முந்திய நாள் இரவில்,

அவனால் அழகுபடுத்தப்பட்ட முகம், எமதர்மனின் முகத்தைப் போல விகாரமாகி அவனது பக்கம் திரும்பியிருந்த விதம், அவனது கரங்களால் அந்த முகத்தின் மீது அழகாக, மெதுவாக அங்கும் இங்கும் ஓடிய மைக்கத்தி எது விதக் கவனமும் இன்றி அவன் பக்கமாக முறைத்துக் கொண்டு இருந்த விதம்? அவளது விழிகளில் இருந்து கண்ணீர்த்தாரை வழியத் தொடங்கியது.

பின்னால் வந்த மோட்டார் சைக்கில் அவளது மேனியில் பட்டும் படாமலும் வந்து நின்றது. அவள் திடுக்கிட்டுத் திரும்பினால், “சின்னவன்! அவளது கண்களில் கனல் பறந்தது. நெஞ்சு படபடத்தது. “சின்னவன் குரல் அவளை எழுப்பியது” எனக்கு நினைவிருக்கிறது முதல் நாள் அந்தியில் நான் முகச்சவரம் செய்து கொண்டு பிறகு வந்து பணம் தாறேன்” என்று சொல்லிப் போட்டு வந்தது. முத்தண்ணனிடம் நான் மிச்சம் கொடுக்கல் வாங்கல் செய்திருக்கிறேன். ஆனாலும் முத்தண்ணனோட உயிரற்ற உடலைக் கண்டதும் நானும் இதுக்கு உடந்தையாக இருந்திட்டேனே என வருத்தமா இருக்கு”

அவன் சொல்லிக் கொண்டு போனான்.

அவள் எதுவும் பேசவில்லை.

“சோமக்கா இப்ப எங்க போகப் போறீங்க”?

“வீட்டுக்கு”

அவள் சிறிது நேரம் அமைதியாகக் காணப்பட்டாள்.

“அப்பா, அம்மா சோமக்காவை ஏத்துக்குவாங்கன்னு நெனக்கிறீங்களா”?

அவள் பெருமூச்சு விட்ட படி தெருவின் தூரத்தே நோக்கினாள். சந்தியில் காணப்பட்ட சைவக் கடையில் இருந்த மேசை, கதிரை, தளபாடங்கள் நொருக்கப்பட்டு வெளியில் தூக்கி எரியப்பட்டிருந்தன. அலுமாரிகளில் இருந்து உடைந்த கண்ணாடித் துண்டுகள் வெளிச்சத்தில் மின்னின.

“சோமக்கா என்னோட இருக்க

விருப்பமா?
போல் தி
கன்னங்க

அவன்
சைக்கிளை
வேகமாக

அவளா
முடியவில்
சிதறிவிடும்
ஜீப் வண்
சென்றது.
அமர்ந்து
அழுதாள்.

குழந்
அவளது
தொலைந்
விட்டபடி
குழந்தை

கலைத்தென்றல்

...யாளராக,
...ற தூவானம்
அனைவராலும்
...ி ஏராளமான
...நர்காணல்
அவரை பேட்டி காண்பதில்

...ல்வி



இப்பொழுது ஏன் எழுதுவது இல்லை?

**பதில்:-** உள்ளத்தில் ஊற்றெடுக்கும் கவிதைகளை அவ்வப்போது நோட்டுப் புத்தகத்தில் பதிவாக்கிக் கொண்டிருக்கின்றேன். ஊடகமெதிலும் வரவில்லை என்பதால் நான் எழுதவில்லையே எனும் சந்தேகம் உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறதென நினைக்கிறேன்.

**கேள்வி:-** ஒரு கால கட்டத்தில் இலங்கைக் கவிஞர்களின் பாடல்களை மெல்லிசை பாடல்களாக ஒலிபரப்பினார்கள் இப்பொழுது அந்த நிலைமை இருக்கிறதா?

**பதில்:-** நிச்சயமாக தமிழ் தேசிய சேவை முழுமையான பங்களிப்பைச் செய்யும் அதே நேரம் வர்த்தக சேவையும் தென்றலும் பொருத்தமான தருணங்களில் மெல்லிசை கீதங்களுக்கு உரிய இடம் கொடுக்கத் தவறுவதில்லை.

**பேட்டி: எஸ்.ஏ. ஜீவா**
**படம்: கே.பி.**

**மூலம் - கே.கே. சமன் குமார**
**தமிழில் - மாவனல்லை எம்.எம். மன்சூர்**

விருப்பமா?" அவள் இடி விழுந்தவள் போல் திரும்பிப் பார்த்தாள். அவளது கன்னங்களும், உதடுகளும் துடித்தன.

அவன் மறுகணம் மோட்டார் சைக்கிளைத் திருப்பிக் கொண்டு வேகமாக ஓடி மறைந்தான்.

அவளால் அதற்கு மேல் நடக்க முடியவில்லை, நெஞ்சு வெடித்துச் சிதறிவிடும் போலிருந்தது. வேகமாக வந்த ஜீப் வண்டி ஒன்று அவளைத் தாண்டிச் சென்றது. அவள் நடை பாதையில் அமர்ந்து நீண்ட நேரம் தேம்பித் தேம்பி அழுதாள்.

குழந்தை ஆழ்ந்த நித்திரையில், அவளது கண்களில் இருந்த தூக்கம் தொலைந்து விட்டது. எனினும் மூச்சு விட்டபடி தெருவை நோக்கியவள், குழந்தையைத் தூக்கிக் கொண்டாள்.



# தேசம் நூலகம்

## தோட்டக்காட்டி
### இரா. வினோத்



இரா. வினோத்தின் "தோட்டக்காட்டி" என்ற இக்கவிதை நூல் இலங்கை மலையக மக்களின் வலிமிகுந்த வரலாற்றினையும், நிகழ்கால யதார்த்தத்தையும் படம்பிடித்து காட்டியுள்ளது. கவிஞர்கள் பெரும்பாலும் நிகழ்கால நிகழ்வுகளையே பதிவு செய்வார்கள் வெகு சிலரே கடந்த கால வரலாற்றை பதிவு செய்வார்கள் அந்த வகையில் இலங்கைக்கு வந்த ஒரு சில நாட்களில் மலையக மக்களுடன் இரண்டறக் கலந்து அவர்களது வரலாற்றினை வாய்மொழியாக அறிந்து கொண்ட பின்னர் அம்மக்களின் தொடர்பாக வெளிவந்த ஆய்வுப் பதிவுகளை ஆராய்ந்து அவற்றினைக் கவிதையாக பதிவு செய்வதில் இரா.வினோத் வெற்றி கண்டுள்ளார்.

ஈழத்தின் மலையக தேயிலைக் காடுகளுக்குத் தமிழகத்தில் இருந்து புலம் பெயர்ந்து ஒடுக்கப்பட்ட மக்களின் வலி மிக்க வரலாற்றைக் கவித்துவமிக்க வரிகளால் காட்சிகளில் வடித்துக் கொண்டே செல்கிறார் வரி வரியாய் மானுடத்தின் அவல நாடகத்தைக் காட்சிப்படுத்தும் இத்தொகுப்பில் "ஏலோயி ஏலோயி லாமா சபாக்தானி" என்ற தலைப்பில் இயேசு பெருமானின் முறையீட்டோடு தோட்டத் தொழிலாளிகளின் முறையீட்டோடு தோட்டத் தொழிலாளியின் ஓலத்தை ஒப்பீடு செய்திருக்கும் பகுதி மனதை பிழிகிறது.

தொடர்பு இரா. வினோத் - பெங்களூர் E-mail:- vinoth.writer@gmail.com

## எந்திரங்களோடு பயணிப்பவன்
### சொர்ணபாரதி



"எந்திரங்களோடு பயணிப்பவன்" என்ற தலைப்பிட்ட இந்த கவிதை தொகுப்பில் ஏறத்தாழ 50 கவிதைகள் இடம் பெற்றுள்ளன.

"இவருடைய கவிதைகளில் மிக எளிமையான மொழியில், கவிதை கட்டமைப்பில் எழுதப்பட்டவையும் உண்டு அடர் செறிவான மொழியில் பூடகமும், இருண்மையுமாக எழுதப்பட்டவைகளும் உண்டு. தமிழ் கவிதைகளை தொடர்ந்து வாசித்து வருபவர் என்ற வகையில் நவீனத் தமிழ்க் கவிதைப் போக்குகள், தேக்கங்கள், அரசியல்கள் எல்லாமே அறிந்தவர் தொகுப்பின் தலைப்பைக் கொண்டு இடம் பெற்றுள்ள கவிதை எந்திரங்களினால் கிடைக்கும் நன்மைகளை அனுபவித்துக்கொண்டே அவை குறித்து அங்கலாய்க்கும் வழக்கமான மனோபாவத்திலிருந்து மாறுப்பட்டு "எப்படியாயினும்! எந்திரங்கள் மிக அன்பானவை அவற்றோடு பயனிக்க பிடிக்கிறது, வாழ்ந்திடவும் என்று நிறைவுறுகிறது.

தொடர்பு:- சொர்ணபாரதி E-mail:- ssornabharathi@gmail.com

## பலதும் பத்தும்
### கோப்பாய் சிவம் கட்டுரைகள்



இலக்கிய உலகில் அரை நூற்றாண்டை அடைந்துள்ள பன்முக ஆற்றல் கொண்ட படைப்பாளி கோப்பாய் சிவம் கவிதை சிறுகதை, கட்டுரை, விவரணங்கள், பத்தி எழுத்துக்கள், மேடை சொற்பொழிவு, என ஆளுமைமிக்கவர்.

இவரது இலக்கிய செயற்பாட்டின் ஐம்பதாவது அகவையினை முன்னிட்டு தமிழ் இலக்கிய உலகத்திற்கு பல நூல்களை வழங்கியுள்ளார். அவற்றுள் ஒன்று "பலதும் பத்தும்" என்ற இந்த நூலாகும். இதில் "கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

இன்றைய இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ள வேண்டிய பல தகவல்கள் இந்த கட்டுரையில் இடம் பெற்றுள்ளன. படிப்பதற்கு ஏற்ற வகையில் சிறப்பான நடையில் கட்டுரைகளை எழுதியுள்ளார். கவிதைப்போர் என்ற கட்டுரையில் கால் நூற்றாண்டுக்கு முன்னர் பாரதியை வைத்து கவிஞர்கள் கவிதைப் போர் நடத்தியுள்ளனர். 1958-ம் ஆண்டு தினகரன் வார வெளியீடுகளில் பதின்மூன்று வாரங்கள் நீடித்த இந்த போரில் நேரடியாக முட்டிக் கொண்டவர் தான் தோன்றி கவிராயரும், முருகையனும் மற்றும் இந்த கவிதா போரில் மோட்டுக் கவிராயர், மஹாகவி, நீலாவணன், மு.பொன்னம்பலம் ராஜபாரதி, பரமஹம்சதாசன், பாணன், பாவேந்தர் பட்டிக் காடனார் ஆகியோர்.

தொடர்பு:- கோப்பாய் சிவம்
ஸ்ரீ நகரம் அளவோடை வீதி, இணுவில் மேற்கு - சுன்னாகம்.

# கவியரங்கு

## சுத்தமாய் வேண்டும் சமாதானம்

சாதம்பெற சகலபேரும் சமைப்பதோ நெல்லை
சர்வதேச பொழுதுபோக்காய் சார்வதோ எல்லை
பாதம் தொழும் இறைவணக்க பேதமே இல்லை
பார் செழிக்க கார்பொழிய உதவிடும் முல்லை ?

முப்பது ஆண்டுகாலம் முழுவதும் முகத்தில் கண்ணீர்
மூவின மக்கள் சாக முட்டுவது நிலத்தில் செந்நீர்
தப்பேதோ பாதைமூடிப் பயணங்கள் ஓயலாச்சே
வேகாத வெயிலில் நின்று வரிசையில் காயலாச்சே.

ஆகாத யுத்தம் தந்த அகப்புண்கள் ஆறமுன்னர்
சாகாமற் சாகச்சொல்லி குழுதே துன்பம் பின்னர்
போகாது பாதைமூடிப் பயணங்கள் ஓயலாச்சே
வேகாத வெளியில் நின்று வரிசையில் காயலாச்சே.

போர் வந்து குந்தியதால் பொருளுக்கே தட்டுப்பாடு
யார் வந்து வைக்கப்போறார் அவற்றிற்கு கட்டுப்பாடு
வேரோடு வேலையற்றால் வறியோர்க்கு திண்டாட்டம்
ஊர் கேடுகெட்டு விட்டால் உரிப்போர்க்கு கொண்டாட்டம்.

கத்தியும் வாளும் கொண்டு யுத்தமே மூளும் என்ற
சத்தமே எங்கள் நாட்டில் நித்தமே கேட்பதாலே
இரத்தமே யாரும் சிந்தா இன்னுயிர் காத்துவாழ
சுத்தமாய் வேண்டும் சமாதானம் இத்தரையிலே.

அன்னை ஈழம் முன்னையோர்கள் தந்த உடைமை

அடிபிடியாம் சண்டையாலே அழித்தல் மடமை
கன்னை சேர்த்து கூறுபோட்டால் வருமே மிடிமை
கண் இமையா காப்பதெங்கள் எல்லோர் கடமை.

வறியவரே ஆனாலும் வந்தனை செய்வார்
வந்தவரை வரவேற்று வெற்றிலை வைப்பார்
அறியாதோர் ஆனாலும் அடிசில் படைப்பார்
அன்புடனே வாழ்வதற்குத் தன்னையும் உடைப்பார்.

மனிதர் இந்தப் பூமி தன்னில் பிறந்ததேனப்பா - அடுத்த
மனிதர் வாழ்வில் உதவி செய்து வாழத்தானப்பா
புனிதராக மனிதர் மாறும் காலம் ஏதப்பா - ஒருவன்
பிறருக்காக வாழத்தன்னை இழக்கும் நாளப்பா.

சமமானஸ்தானம் தானே சமாதானமாகும் என்றார்
சகலரும் முடியாதென்று சனத்தினில் அதனைக் கொன்றார்
கற்றவர் கல்லாதோரை கனவிலும் கனமே பண்ணார்
பொருள் பெற்றவர் அற்றோர் தம்மை பொருட்டாக மதிக்க எண்ணார்.

பிறருக்காக வாழ் என்று கற்றுத் தந்தார் இயேசு - அதை
பற்றிவாழப் பழகிக்கொண்டு பிறரிடத்தில் பேசு
இறக்குமுன்னே இருப்பதிலே இறப்பவர்க்கு வீசு - மோட்ச
திறப்பதனை தருவதில்லை தரணியில் தாள்காசு.

இன்று ஆகும் நாளை வேகும் என்று எண்ணு யாக்கை - நீ
உன்னை விற்று பிறருக்கிட்டு உதவுவதே வாழ்க்கை
ஒன்று கூட்டி அன்பு காட்டி உண்டு வாழும் காக்கை - அதை
கண்டு நெஞ்சில் கொண்டு பிஞ்சில் மாற்றும் உந்தன் போக்கை.

**- ஜெ.ஜெகன் -**

(உழைக்கும் மக்கள் கலைவிழாவிற்காக "வியர்வையின் ஓவியம்" என்ற கவிதைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற கவிதை)

## புதிதாக எதையும் எழுதவில்லை

புதிதாக எதையும் நான்
எழுதி வரவில்லை,
என்று தான் புதிதாக
எழுதி முடித்தேன்
எழுதிய தெல்லாம்
மொழிப்பெயர்ப்புதான்
இளைஞர் விழிகளிலே
எரியும் சுடர்களையும்
போராடுவோரின்
நெற்றிச் சுழிப்புகளையும்
இதுவரை கவிதை யென்று
மொழிப் பெயர்த்திருக்கிறேன்
நியாயச் சூட்டால்
சிவந்த கண்கள்
உரிமை கேட்டுத்
துடிக்கும் உதடுகள்
கொடுமைகளுக்கு எதிராக
உயரும் மக்கள்
எனது பேனாவை
இயக்கும் சக்திகள்

**- இன் குலாப் -**

நம்மிடையே போராளிக்கவிஞராக வாழ்ந்து கடந்த நவம்பர் மாதம் அமரரான கவிஞர் இன்குலாப்புக்கு அஞ்சலியாக இந்த கவிதை பிரசுரிக்கப்படுகிறது.

## தொடர்பு எல்லைக்கு அப்பால்

ஓயாத வேலை
அவருக்கு

மனம் விட்டுப் பேசி
ஆகி விட்டன மாதங்கள்

நிறைய பேசனும் என்று
ஒரு ஞாயிறு
அழைத்துச் சென்றார் கடற்கரைக்கு

பேசிக் கொண்டேயிருந்தார்
யார் யாருடனோ
செல் பேசியில்

**- நிறைமதி -**

## யன்னல் காற்று

வாடாமல்லி வாசம்
மூக்கில் புகுந்து
மூளையை தொட்டுக் கொண்டிருக்க
தேன் சிட்டோ தேடித் தேடி
நிரப்பிக் கொண்டிருந்தன
நீண்டநேரம் - தேன்துளிகளை.

என்னவொரு இனிமையான சப்தம்
இயற்கை நடித்துக் கொண்டிருக்கும்
மேடை நாடகத்திற்கு
தேனியோ ரீங்காரமிட
சேவலோ கூவ பெட்டைக் கூட்டங்களோ
கொக்கரக்கோ என கூட்டமாக சுற்ற
வண்டு இறைய காகம் கரைய
ஆஹா!
ஆஹா!
என்ன அற்புதமான பின்னணியிசை

இயற்கையின் இந்த ரம்மியமான
அரங்கேற்றத்துக்கு - நாம்

எத்தனை விருதுகளைதான் கொடுப்பது
விருதுகளுக்கும் அப்பாற்பட்ட ஒரு
அதிசயம்
இது ஒரு புதிர்! புரியாதது!
யன்னல் காற்று யந்திரக் காற்றாய்
ஆகாமலிருந்தால் சரி.

**- பவெள் -**



## என் தெரு வழியே போறவரே'

என்
தெரு வழியே
போற வரே
எப்போ தேனும்
அணைத்ததுண்டா
மனிதரென்று
எங்களை?

இல்லையெனில்
ஏன் வருகிறீர்கள்
அவசரமாக
மத மாற்ற?

**- கவிமதி -**

## விலைவாசி

இந்த தேசத்திலேயே
மிகவும் உயர்ந்தவன்
கிராம வாசியா
நகர வாசியா
இல்லை
விலைவாசி

**-கந்தர்வன்-**

**தேசம்**

**வாசகர்களுக்கு...**

தேசம் பத்திரிகையின் வளர்ச்சி வாசகர்களின் கருத்துகளிலேயே தங்கியுள்ளது. உங்கள் எண்ணங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்.
கதை, கட்டுரை, கவிதை, அரசியல் விமர்சனங்களை அனுப்பிவையுங்கள்.
**"தேசம்" 22/13 1/1 சமன் உயன, தம்பஹேன வீதி, மகரகம.**
E-mail: deshamnews@gmail.com

# உங்கள் மீது சுமத்தப்பட்டுள்ள கடன் தொகை தெரியுமா?



எதிர்கால பரம்பரைக்கு கடன் சுமையை விட்டுவிட மாட்டோம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் அண்மைக் காலத்தில் தாரக மந்திரமாக ஓதிக் கொண்டிருந்தார். இவர் இதனை தொடர்ந்தும் கூறியது, அம்பாந்தோட்டை துறைமுகத்தையும் அதனை அண்டிய பகுதியில் 15,000 ஏக்கர் நிலத்தையும் சீனாவுக்கு தாரைவார்ப்பதை நியாயப்படுத்தும் கருத்தியலை உறுதிசெய்வதற்கே ஆகும். நாட்டை தாரைவார்க்கும் நடவடிக்கையை பொதுமக்கள் எதிர்ப்பதால் அதனை திசைதிருப்புவதற்காகவே பிரதமர் இவ்வாறு நடந்து கொள்கிறார்.

பிரதமரின் இக்கூற்றை கேட்கும்போது அவர் Mr. Bean போன்ற கோமாளியாகவே தென்படுகிறார். Mr. Bean னின் நகைச்சுவைக்கு சிரிப்பு வந்தாலும், பிரதமர் நம் அனைவரும் சிரிக்க வைத்துவிட்டு நாட்டை பாரியதொரு அழிவினை நோக்கிக் கொண்டு செல்வது உறுதியானதாகும். நாம் இவ்வாறு கூறுவது இவ்விடயங்களை நன்கு ஆராய்ந்தே ஆகும். ரணில் விக்கிரமசிங்க அவர்களுடன் தனிப்பட்ட கோபத்தின் காரணமாக நாம் இதைக் கூறவில்லை.

ரணில் - மைத்திரி கூட்டரசாங்கம் பதவியேற்ற நாள்முதல் இதுவரை காலமும் எவ்வளவு தொகையைக் கடனாக எடுத்துள்ளார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா? 2016ம் ஆண்டில் சர்வதேச நாணய நிதியத்திடம் 1500 டொலர் மில்லியன்கள் அதாவது 2,25,000 ரூபாய். இத்தொகையை ஆறு கட்டங்களாக எமக்கு கிடைக்கின்றது. கொழும்பு பங்குச் சந்தையை புனர் நிர்மாணம் செய்வதற்கு இன்னும் 250 டொலர் மில்லியன்கள் 37,500 ரூபாய் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் பெறுவதற்கு தயாராகின்றனர்.

பெரியளவிலான கடன் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டு கட்டம் கட்டமாக இக்கடன் தொகை எமக்கு கிடைக்கவுள்ளது.

2016ம் ஆண்டில் முதல் எட்டு மாதக்காலத்தில் அரசாங்கம் பெற்றுகொண்டுள்ள மொத்த கடன் தொகை 10,39,700 மில்லியன் ரூபாய்களாகும் என நிதியமைச்சின் அறிக்கைகளினால் உறுதியாகின்றது.


மேலே குறிப்பிட்ட ஒப்பந்தங்கள் ஊடாக எதிர்காலத்தில் ஓர வருடக் காலத்துக்குள் பெற்றுக்கொண்ட கடன் தொகையே இது. எதிர்கால பரம்பரைக்கு கடன் சுமையை சுமத்தமாட்டோம் என்று வாய்ச்சவடால் விடும் அரசின் உண்மை நிலை இதுவாகும். அதேபோன்று முன்னாள் ராஜபக்ஷ ஆட்சி காலத்திலேயே நாடு கடன் சுமைக்கு தள்ளப்பட்டது என்று கூறுகின்றார்கள். மஹிந்த ராஜபக்ஷ பெருமளவு கடன்தொகை பெற்றுகொண்டது உண்மையென்றாலும், 1948ன் பின் ஆட்சி செய்த அனைத்து ஆட்சியாளர்களும் பாரியளவு கடனைப் பெற்றுக் கொண்டுள்ளார்கள் என்பதே உண்மை. மத்திய வங்கி அறிக்கைக்கு இணங்க தயாரிக்கப்பட்ட அறிக்கைகளில் அதனை மிகத்தெளிவாக அவதானிக்க முடிகின்றது. 1950ம் ஆண்டுக்கு பிற்காலத்தில் ஆட்சி மாற்றங்களின் போது காணப்பட்ட கடன் தொகையை பார்ப்போம். 1950 காலகட்டத்தில் ஐ.தே.க. ஆட்சி முறையே காணப்பட்டது. அன்று கடன் தொகை 654 மில்லியன் ரூபாய்களாகும். 1956 காலகட்டத்தில் இத்தொகை 1,208 மில்லியன் ரூபாவாக உயாந்தது. ஆறு வருடங்களுக்குள் இத்தொகை இரண்டு மடங்கானது 1956 பண்டாரநாயக்க ஆட்சியில் இத்தொகை 2,282 ரூபா மில்லியன்களாகியது.


மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்கும்போது கடன்தொகை 22,22,341 மில்லியன் ரூபாய் கூறப்பட்டதோடு 2015ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டபோது அவரது ஆட்சி காலத்தில் பெற்றுக்கொண்ட கடன்தொகை 85,03,227 மில்லியன் ரூபாயாக கூறப்பட்டது.

1950ல் நாட்டில் மொத்த சனத்தொகை 75,44,000 ஆகும். மொத்தக்கடன் தொகையை சனத்தொகையால் பிரித்து பார்க்கும் போது தனிநபர் கடன்தொகை 86 ரூபாய் 69 சதமாக காணப்பட்டது. 2015ம் ஆண்டு இறுதியில் நாட்டின் சனத்தொகை 20,966 மில்லியன்களாகும். மொத்தக்கடன் 85,03,227 தொகையை சனத்தொகையால் பிரித்துப் பார்ப்பதால், அத்தொகை 4,05,572 லட்ச ரூபாய்களாகும் நாட்டின் சிங்களம், தமிழ், முஸ்லிம் என்ற வேறுபாடின்றி நம் அனைவரது மீதும் இச்சுமை சுமத்தப்பட்டுள்ளது. எம்மை கடனாளிகளாக்கியிருப்பது எமது வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கு அல்ல. நாட்டை ஆட்சி செய்த ஐ.தே.க, ஸ்ரீ ல.சு.க முதலாளித்துவ ஆட்சியாளர்கள் அதிசொகுசு வாழ்க்கையை அனுபவித்துக்கொண்டு, எமது வாழ்க்கைத் தரத்தை ஆகக்கீழ் மட்டத்துக்கு தள்ளியுள்ளார்கள். இவ்வாறான அரசியல் முறையை மாற்றியமைக்க வேண்டாமா?

கந்தர்வன்

# தேசிய வளங்களை விற்பதே ஓரே தீர்வு






அரச நிறுவனங்களையும், தேசிய வளங்களையும் அவிற்பதே இன்றைய கூட்டரசாங்கத்தின் ஒரேயொரு பொருளாதார தந்திரோபாயமாக உள்ளதென்பதை இன்று கண்கூடாகக் காணமுடிகின்றது. அரசு உற்பத்தித் துறையை கட்டியெழுப்புவதற்குப் பதிலாக இலாபமீட்டும் அரசு நிறுவனங்களை விற்கும் திசைக்கே பயணித்துக்கொண்டிருக்கிறது. இவற்றுள் திருக்கோணமலையில் அமைந்துள்ள எண்ணெய் குதங்களையும், புல்மோட்டை கணிய மணல் வளத்தையும் விற்பதற்கு தயாராக உள்ளதானது, இன்று பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த 100 எண்ணெய்க் குதங்களில் 17 குதங்களை ஒப்பந்தத்தின் ஊடாக இந்தியா பயன்படுத்தி வருகின்றது. ஆனால் தற்போது அந்த ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டாலும் இன்னமும் இந்தியா இவற்றைப் பயன்படுத்துவது எமது நாட்டு ஆட்சியாளர்களின் இயலாமையின் காரணமாகவே ஆகும். எதிர்வரும் காலத்தில் ஏற்படக்கூடிய மின்சார தட்டுப்பாட்டுக்கு தீர்வாக டீசல் மின்னுற்பத்தி நிலையங்களின் பாவனைக்காகவென்று இன்னும் 16 குதங்களை இந்தியாவிடம் வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகள் அவ்விடத்துக்குச் சென்றபோது இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் அனுமதியைப் பெற்று, இங்கு வாருங்கள் என்று குதங்களில் பணியாற்றும் இந்திய அதிகாரிகள் கூறியுள்ளார்கள். எமது நாட்டு வளங்களை வேறொரு நாட்டின் முழுக்கட்டுப்பாட்டிற்கு விட்டுக்கொடுப்பதும், ஒப்பந்தம் காலாவதியாகிய பின்பும் இந்தியா இவ்வாறு செயற்படுவது ரணில்-மைத்திரி கூட்டாட்சியின் இயலாமையினால் ஆகும்.

அடுத்தது புல்மூட்டையின் கனிய மணல் வளமாகும். உலகில் தலைசிறந்த கனிய மணல் வளமாக குறிப்பிடுவது புல் மூட்டையின் கனிய மணல் வளத்தையாகும். அதில் 90மூ கனிய வளம் உள்ளடங்கியிருப்பதாக கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது. அவுஸ்திரேலியாவில் உள்ள கனிய மணலில் 20மூ மட்டுமே கனிமம் காணப்படுவதாகவே கூறப்படுகிறது. எனவே எமது இந்த வளம் பாதுகாக்கப்பட வேண்டியதொரு வளமாகும். ஆனால் இப்போது இந்த கூட்டரசாங்கம் அவுஸ்திரேலியா, இந்தியா, யப்பான் போன்ற நாடுகளுக்கு இதனை விற்பதற்குத் திட்டமிட்டு வருகின்றனர். அதேப் போன்று இலங்கை நிறுவனமொன்றின் அனுசரணையுடன் அவுஸ்திரேலிய நிறுவனம் ஒன்றிற்கு இந்த வளத்தையும் முகாமையாளர்களையும் விற்பதற்கு அரசு தயாராக உள்ளதாகவும் தெரியவருகிறது. பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு வழியில்லாத அரசு பொதுமக்களுக்கு உரித்தாக வேண்டிய இவ்வாறான வளங்களை விற்பதே ஒரே தந்திரோபாயமாக ஏற்றுக்கொண்டுள்ள இந்த அரசாங்கத்தின் மக்கள் விரோத நடவடிக்கைகளை தோற்கடிக்க முடிவது தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் ஒன்றிணைந்து போராடுவதால் மட்டுமேயாகும் என வலியுறுத்துகிறோம்.

சந்திரன்

03»

நமது நாட்டில் முக்கியமான கனியவளம் புல்மோட்டை கனிய மணலாகும். அந்தக் கனியவளத்தில் 70-80 வீதம் வரையில் முக்கியமான கனிமங்கள் அடங்கியுள்ளன. உலகத்தில் இருக்கும் கனிமங்களில் கூடுதலான அடர்த்தியுள்ள கனிமங்கள் இதில் அடங்கியுள்ளன. இல்மனைட், ரூடைல், மொனசைட் மற்றும் கானட் போன்ற அதிக பெறுமதிமிக்க கனிமங்கள் இதில் அடங்கியுள்ளன.

நாட்டில் உள்ள மிகப்பெறுமதியான கனியவளம் புல்மோட்டை என பாடசாலையில் கற்பிக்கப்படுகின்றது. அவ்வாறு இருக்கும் போது இந்த அரசாங்கம் தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரை நியமித்து கனியமணலை விற்றுத் தீர்க்கப் போகிறது. அதேபோன்று உலகத்தில் முக்கியமான கனிமமான நிலக்கரி, (காரீயம்) கஹட்டகஸ்ஹேன சுரங்கத்தையும் விற்றுத் தீர்க்கத் திட்டமிட்டுள்ளது. ஈரத்தன்மை குறைவான மிகவும் சுத்தமான காரீயத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடிய கஹட்டகஸ்ஹேன சுரங்கத்தை அரசாங்கம் ஏலத்தில் விடத் தீர்மானித்துள்ளது. இவ்வாறு துறைமுகங்களை விற்குமானால், கனியவளங்களை விற்குமானால் இது ஒரு அரசாங்கமல்ல. இது சரியாக பகிரங்க ஏல விற்பனைக்கார நிறுவனமாகும்.

இந்த அரசாங்கம் எஜமான் வீட்டில் பிறந்த குடிகாரனைப் போன்றது. நமது நாட்டின் பொருளாதார வளங்களுக்குப் பயன்படுத்தக்கூடிய மிகப்பெறுமதியான இயற்கை வளங்கள், மனித வளங்கள் இருக்கின்ற போது, ஊதாரிப் பையனைப் போல ரணில் - மைத்திரி அரசாங்கம் நடந்துக்கொள்கிறது.

அதனால் நமது நாட்டில் பெறுமதியான இயற்கை வளங்களை விற்றுத் தீர்த்துக் கொண்டு செல்லும் இந்த அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளையும், அழிவுமிக்க ஆட்சிகயையும் தோற்கடிப்பதற்கு போராட முன்வருமாறு கேட்டு மக்களுக்கு அறைகூவல் விடுக்கின்றோம். தற்போது அம்பாந்தோட்டை காணிகளை விற்பதற்கு எதிராக பாரிய மக்கள் போராட்டம் வெடித்துள்ளது.

துறைமுகத்தை விற்பதற்கு எதிராக போராடுவதற்கு சகல தொழிற்சங்கங்களும் அணிதிரண்டுள்ளன, அதேபோன்று கஹட்டகஸ்ஹேன காரியச் சுரங்கம், புல்மோட்டை ஊழியர்களைச் சந்தித்து அதை விற்பதற்கு எதிரான போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. அதேபோன்று கற்பிட்டி தீவுகளை தாரைவார்ப்பிற்கு எதிராக மக்களை அணிதிரட்டும் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.


மேலும் அம்பாந்தோட்டை துறைமுக ஊழியர்களின் போராட்டமானது, தம்மை நிரந்தரமாக்கும்படி கேட்கும் போராட்டத்தை வெகு தீவிரமாக முன்னெடுக்க திட்டமிட்டுள்ளது. அதன்மூலம் ஊழியர்களின் உரிமையை நிலைநாட்டும் போராட்டம், அடுத்த ஆண்டில் உக்கிரமடையப் போகின்றது. இவை அனைத்துக்கும் மக்கள் விடுதலை முன்னணியும், அதன் தொழிற்சங்கங்களும், மக்கள் அமைப்புகளும் முன்னின்று போராடுகின்றன.

இவர்களுக்கு நாம் விடுக்கும் செய்தி, இந்தக் குளிர் காலத்தில் அதாவது டிசம்பர் மாதத்தில் நீங்கள், ஹொங்ஹொங், டுபாய் சென்று குளிர் காய்ந்து வாருங்கள். அடுத்த ஜனவரி மாதம் ஆர்ப்பாட்டங்களால் இந்த நாட்டை நாங்கள் சூடேற்றுகின்றோம். இந்த வளங்கள் எமக்கு மட்டும் சொந்தமானவையல்ல. பிறந்த, பிறக்காத மக்களுக்கும் சொந்தமான இந்த வளங்களை பாதுகாக்க வேண்டும். அதனால் அரசாங்கத்துக்கு எதிரான சகல மக்கள் சக்திகளும் ஒன்றிணைக்கப்பட்ட பரந்தளவிலான மக்கள் சக்தியை உருவாக்கி பாரிய போராட்டத்தை முன்னெடுக்கப்படவிருக்கின்றது.



# முன்னாள் ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்தின் படுகொலைகள்





படுகொலைகளின் வரிசையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவர் உட்பட மாணவர்கள், பொதுமக்கள் என பலர் கடத்தப்பட்டு கொல்லப்பட்டனர் இவர்கள் யாரால்? ஏன்? கொல்லப்பட்டனர் என்பது மக்களுக்கு புரியாமல் இல்லை. படுகொலைகள் என்பன இராணுவ மேலதிக்கம் கொண்ட அரசின் பாதுகாப்புத்துறையினால் முன்னெடுக்கப்பட்டவையாகும். அப்போதய பாதுகாப்புத் துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆவார். முதலில் ஜோசப் பரராஜசிங்கம் கொல்லப்பட்டார். அவர் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினராவார். தமிழ் தேசியக்கூட்டமைப்பு என்று ஒரு அமைப்பை தமிழீழ விடுதலைப் புலிகளே அமைத்திருந்தனர். அந்த அமைப்பினர் பாராளுமன்றம் சென்றாலும் புலிகளின் குரலையே அங்கு ஒளித்தனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதேசவாதப் பிளவின் பின்னர் கிழக்கு மாகாண கருணா அம்மானின் கொள்கை அமைப்பு அரச பாதுகாப்புத்துறையுடன் சங்கமித்தது. பிரபாகரன் சார்பு, கருணா சார்பு புலிகள் இரண்டுமே ஆயுத தாரிகள் ஆவார்.

இந்நிலைமைகளை பாதுகாப்புத்துறை கச்சிதமாக கையாண்டு படுகொலைகளுக்கு வியூகம் அமைத்தது. ஜோசப் பரராஜசிங்கம் அவ்வகையிலேயே கொல்லப்பட்டார். கொலையாளியாக பிள்ளையான் எனப்படும் சிவநேசத்துறை சந்திரகாந்தனுக்கு எதிராக வழக்கு நிலுவையிலுள்ளது. அதேபோல் தியாகராசா மகேஸ்வரனும் கொல்லப்பட்டிருந்தார். இவர் கிளாலி யாழ்ப்பாணம் கடற் சேவையைப் புலிகள் இரவு வேலைகளில் நடாத்தி இருந்த வேலைகளில் வெற்றிலைச் சிப்பங்களை வவுனியாவில் கொள்வனவு செய்து கிளாலியுடாகக் கொண்டு சென்று வியாபாரம் செய்தார். பின்னர் புலிகளுக்குத் தேவைப்பட்ட அரசினால் தடை செய்யப்பட்ட பொருட்களை பாதுகாப்பமைச்சின் கண்களில் மண்ணைத்தூவி வேறொரு உத்தியைக் கையாண்டு புலிகளுக்குப் பொருட்களை வழங்கி அவர்களிடமிருந்து கிடைத்த அபரிமிதமான இலாபத்துடன் முதலாளியானார். அப்போதைய நிலையில் மேட்டுக்குடி சாதித்துவ அமைப்பினருக்கு ஏற்ப ஒரு யு.என்.பி யின் பாராளுமன்ற உறுப்பினர் ஆக்கப்பட்டார். ஆனால் அவர் புலிகளின் பிரதிநிதியாகவே பாராளுமன்றத்தில் செயற்பட்டிருந்தார். நன்றிகடன் அதுவாகும். அவருக்கும் பாதுகாப்புத்துறை இலக்குவைத்ததில் வியப்பேதும் இல்லை. அவ்வழக்கு விசாரணையும் புஸ்வானம் தான்.

எல்லாமாகப் பாராளும்மன்ற உறுப்பினர்கள் மூவர் கொல்லப்பட்டிருந்தனர். கொலை சம்பந்தமான விசாரணைகள் கடந்த காலத்தில் கிடப்பில் போடப்பட்டிருந்தன. இவை மீளவும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. உறுதியான விசாரணைகள் நடைபெறுமா என்பது சந்தேகமே.

மற்றும் தர்மரத்தினம் சிவராம் (தராக்கி) 2005ல் ஏப்பிரல் 28ம் திகதி பம்பலப்பிட்டியில் வைத்து வெள்ளை வான் கடத்தலில் அகப்பட்டார் அதியுயர் பாதுகாப்பு வளயமான பாராளுமன்ற வளாகத்திற்கு அருகில் வைத்துச் சுடப்பட்டார். நிமலராஜன் என்னும் ஊடகவியலாளர் யாழ்ப்பாணத்தில் வைத்து சுடப்பட்டார் ஊடக சுதந்திரத்தின் மூலம் அரசுக்கு எதிராக ஏதேனும் கருத்துக் கூறினால் காணாமலாக்கப்பட்டு விடும் சூழ்நிலை இருந்த காலமாகும். கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் வரிசையில் சுப்பிரமணியம் சுகிர்தராஜன் சுடர் ஒளி பத்திரிகையாளர் 24-01-2006 லும் உதயன் பத்திரிகையாளர் 03-05-2006 லும் சிங்கள இனத்தவரான சம்பத் லக்மல் என்பவர் சுதந்திர பத்திரிகையாளர் சுதந்திரதினத்தன்று 02-07-2006 லும் ரஞ்சித்குமார் என்பவர் சர்வதேச பத்திரிகைகள் சுதந்திரத்தினத்திலும் சதாசிவம் பாஸ்கரன் என்ற உதயன் பத்திரிகை விநியோகிஸ்தர் வெள்ளை வான் ஆயுதத்தாரிகளால் சுடப்பட்டார். மேலும் சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளன.

1) சின்னத்தம்பி சிவமகராஜா முன்பு ஈழநாடு பத்திரிகைக் காரியாலயம் இருந்த வீட்டில் வைத்து சுடப்பட்டார். இவர் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் என கருதப்பட்டார்.

2) சுப்பிரமணியம் இராமச்சந்திரன் வடமராட்சி வலம்புரி காரியாலயத்தில் அதுவும் உயர் பாதுகாப்பு வலயத்தில் வைத்துச் சுடப்பட்டார்.

3) செல்வராஜ் ரஜீவர்ணம் உதயன் பத்திரிகையாளர்

4) புலிகளின் குரல் வானொலியில் கடமையாற்றிய இசைவிழி செவ்வியன்

5) பவசிங்கம் தேவகுமார் சக்தி ஒளிபரப்பு சேவையில் கடமையாற்றியவர் இவர் 25-08-2008ல் கொல்லப்பட்டார்.

6) லசந்த விக்கிரமதுங்க சண்டே லீடர் பத்திரிகையாளர் இவர் கொடூர சித்திரவதையின் பின்னர் கொல்லப்பட்டார்.

7) ஈழநாதம் பத்திரிகையாளர் புன்னியமூர்த்தி சத்தியமூர்த்தி

8) புலிகளின் குரல் வானொலியில் கடமையாற்றிய இசைப்பிரியா என்ற பெண்மணி யுத்தம் முடிவிற்கு கொண்டுவந்த பின்னர் 18-05-2009ல் பாலியல் வல்லுறவின் பின்னர் கொல்லப்பட்டார்.

9) புலிகளின் குரல் வானொலியில் கடமையாற்றிய தேவபாலன் 2009 மே மாதம் கொல்லப்பட்டார்.

10) பிரகீத் எக்னெலிகொட லங்கா நியூஸ் பத்திரிகையாளர் 24-01-2010ல் கொல்லப்பட்டார். இக்கொலைச் சம்பவங்களுக்கு நீதி விசாரணைகள் இந்நல்லாட்சியில் நடைபெறுமா? எனறு சமூக நலன் விரும்பிகளும் இவர்களது உறவினர்களும், நாட்டின் நீதி, நியாயம், நிலைபெறும் என்று அரச தலைவர்கள் கூறும் அளவுக்கு மாற்றம் ஏற்படும் என்று எண்ண முடியுமா?

ராஜேந்திரன்

சமர்

# உமா ஓயா அழிவுத்திட்டத்திற்கெதிராக பாதிக்கப்பட்ட மக்கள் வீதியில்






பதுளை மாவட்டத்தில் வெளிமட பிரிவில் புகுல்பொல எனும் பிரதேசத்தில் இருந்து ஓட ஆரம்பிக்கும் உமா ஓயா ஆறானது பண்டாரவளை, ஹாலிஹெல, மஹியங்கனை போன்ற பிரதேசங்களைக் கடந்து கடலில் சங்கமிக்கிறது. இவ்வாறானது மத்திய மலைநாட்டு மக்களின் வெளிநாட்டு மரக்கறிவகை உற்பத்தி, சேனைப் பயிர்ச்செய்கை மற்றும் மஹியங்கனை பிரதேசத்து மக்களின் சிறுபோக உற்பத்தி, நெல் விவசாயம் போன்றவற்றிற்குப் பெரிதும் துணைநின்று உதவுகிறது. ஜுலை, ஓகஸ்ட் மாதங்களில் ஏற்படும் வரட்சி நிலைகளின் போது பிரதேசங்களுடாகப் பாய்ந்தோடும் நீரின் மட்டம் குறையும். இதனால் இதனை நம்பியுள்ள மக்கள் பெரிதும் பாதிப்படைவார்கள்.

கடந்த 2010ம் ஆண்டு மகிந்த ராஜபக்ஷ கூட்டமைப்பானது உமா ஓயாவை ஹம்பாந்தோட்டைக்கு திருப்புவதற்காக பல்தேசிய கம்பணிகள் கூறிய அவர்களின் நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்ப ஈரானின் கடனுதவியோடு இதனை ஆரம்பித்தது. அப்பொழுது மகிந்தவின் அடிவருடிகளான புத்திஜீவிகள், பேராசிரியர்கள் உமா ஓயா திட்டத்தை ஆரம்பிப்பதனால் எந்த பாதிப்பும் இல்லையென கூறினார்கள். ஆனால் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு இன்றுவரை சுற்றாடலுக்கு, குடியிருப்புகளுக்கு, விவசாய நிலங்களுக்குப் பாரிய அளவிலான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. பதுளை மாவட்டத்தில் 2500 வீடுகள் வெடிப்புக்குள்ளாகியுள்ளதோடு, கிட்டத்தட்ட 2000 குடிநீர் கிணறுகள் வற்றிப் போயுள்ளன. விவசாயத்தை நம்பி வாழும் மக்கள் இன்று பாரிய இடையூறுகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். அதுமட்டுமல்லாது இப்பிரதேசத்தில் இருக்கின்ற பறவை இனங்கள், பூச்சி இனங்கள் மற்றும் காடுகள் அழிந்து வருவது வேதனைக்குறிய விடயமாகும். அன்று மகிந்தவின் அணியினர் கூறிய சுவாரஸ்யமான கதைகள் அனைத்தும் இன்று பொய்யாகி போயுள்ளது. பதுளை மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள், வர்த்தகர்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். அதுமட்டுமல்லாது அப்பிரதேசத்தில் உள்ள மதஸ்த்தலங்களும் பாரிய பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். ஆனால் இவ்வாறான மகிந்தவின் அழிவுத்திட்டப் பாதையை மைத்திரி-ரணில் தொடர்வது வேதனைக்குறிய விடயமாகும். எதிர்காலத்தில் இத்திட்டத்தைப் பயனன்படுத்தி ஏனைய சிறு நீர்வழங்கள் சுரங்கங்களைத் தோண்டுவதற்கு ஏதுவான நிலமைகள் தென்படுகின்றன.

உதாரணமாக ஜுலை, ஆகஸ்ட் மாதங்களில் வரட்சியின் காரணமாக நீர்பற்றாக்குறை ஏற்படும் பொழுது அதனை ஈடுசெய்வதற்கு அந்த துணை சுரங்கங்கள் ஊடாக நீரைப் பெற்றுக்கொள்வதற்கான சில தந்திரோபாயங்களையும் பயன்படுத்தலாம். இதன் பின்னணியில் இருந்து அவதானிக்கின்ற பொழுது பதுளை மாவட்டத்தில் மட்டுமல்ல! வருங்காலத்தில் ஒட்டுமொத்த மலையகத்துக்கும் பாரிய ஆபத்துக் காத்திருப்பது தென்படுகின்றது. இவ்வாறான அறிகுறிகளைப் பார்க்கும் பொழுது தோட்டத் தொழிலாளர்கள் பாரிய அபாயமொன்றை எதிர்கொள்ளும் சூழல் ஏற்பட வாய்ப்புண்டு. உமா ஓயா நீர்விநியோகத் திட்டம் தோட்டத் தொழிலாளர்களையும் பாதிப்படையச் செய்யும் என்பதை மறுக்கவும் முடியாது! மறைக்கவும் முடியாது!

இந்த அழிவுத்திட்டதிற்கெதிராக 29/12/2016 அன்று கிளர்ந்தெழுந்த மக்கள் பண்டாரவளையில் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். மக்கள் விடுதலை முன்னணியின் ஊவா பிரதிநிதியும் ஊவா மாகாணசபை உறுப்பினருமான சமந்த வித்தியாரத்னவின் ஏற்பாட்டில் எதிர்ப்பு ஊர்வலம் பண்டாரவளை நகரை நோக்கிப் புறப்பட்டது. தமிழ், சிங்கள, முஸ்லிம்கள் என ஆயிரக்கணக்கானோர் எதிர்ப்பு ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். பௌத்த துறவிகள், முஸ்லிம் பெரியார்கள் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கலைஞர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

**கிட்னண் செல்வராஜ்**

# பட்டப்படிப்பின் துண்டிப்பிற்கு எதிராக திரண்ட மாணவர்கள்



நிகழ்கால அரசாங்கம் வெளியிட்டுள்ள 2016/13 என்ற சுற்று நிருபத்தின் பிரகாரம், உள்வாரிப் பட்டப்படிப்பிற்கு நிகராண எண்ணிக்கையான மாணவர்களை மாத்திரம் வெளிவாரிப் பட்டப்படிப்பிற்கு இணைந்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தல் விடப்பட்டுள்ளது. எனினும் களனி பல்கலைக்கழகத்தில் மாத்திரம் 14000 இற்குப் மேற்பட்ட மாணவர்கள் பதிவினை மேற்கொண்டுள்ளதும் இப் புதிய சுற்று நிருபத்தின் பிரகாரமே. ஆனால் மாணவர்களின் அனுமதி 2400 வரையாக மாத்திரம் மட்டுப்படுத்தப்படவுள்ளது.

இலங்கையில் வருடத்திற்கு 250000 மாணவர்கள் உயர் தரம் பரீட்சைக்கு முகம் கொடுப்பதுடன், அதில் 150000 வரையான மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமை அடைகின்றனர். எனினும் வசதி வாய்ப்புகள் மிகவும் குறைவான காரணத்தினால் 25000 இற்கும் குறைவான தொகையினரே பல்கலைக்கழகத்திற்கு வருடமொன்றில் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர். எஞ்சியுள்ள 125000 இற்கும் அதிகமான மாணவர்கள் தமது பட்டப்படிப்புக் கனவுகளை நனவாக்கிக் கொள்ள வெளிவாரிப் பட்டப்படிப்பு துணை நின்றது. அது மட்டுமல்லாமல் ஏற்கனவே தொழில் புரிபவர்கள் தமது மேலதிகத் தகமைகளுக்காகவும் பதவி உயர்விற்காகவும் வெளிவாரிப் பட்டப்படிப்பினை மேற்கொண்டு வந்தனர்.

எனினும், இத் துண்டிப்பானது மாணவர்கள் மத்தியில் பாரிய அதிருப்த்தியை ஏற்படுத்தியுள்ளதுடன் இதற்கெதிரான மாணவர் செயற்பாடொன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வெளிவாரிப் பட்டப்படிப்பினைப் பாதுகாக்கும் அமைப்புகளின் ஒன்றியம் என்ற பெயரில் சோஷலிச இளைஞர் சங்கம், வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர் அமைப்பு வெளிவாரிப் பட்டப்படிப்பிற்கான தேசிய மாணவர் ஒன்றியம், வெளிவாரிப் பட்டப்படிப்பிற்கான கல்வி வழங்கும் நிறுவனங்கள் மற்றும் விரிவுரையாளர்களின் சங்கம், இலங்கை ஆசிரியர் சேவை சங்கம், வெளிவாரிப் பட்டப்படிப்புகளை பாதுகாக்கும் அமைப்பு (தென் மாகாணம்) உள்ளிட்ட பல அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து இத்துண்டிப்பிற்கு எதிரான பல தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

**ரஞ்சிதன்**


# மதுபான சாலைகளுக்கு எதிராக மட்டு ஆரையம்பதியில் ஒன்று திரண்ட மக்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆரையம்பதி பிரதேசத்தில் இயங்கிவரும் மதுபானசாலைகளை முற்றாக அகற்றக் கோரி அப் பிரதேசவாசிகள் கடந்த டிசம்பர் 29ம் திகதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டமானது மண்முனைப்பற்று பிரதேச சபைக்கு அருகாமையில் ஒருங்கமைக்கப்பட்டிருந்ததுடன் இதில் மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற அமைப்புக்களின் ஒன்றியத்தின் அங்கத்தவர்களும், பொதுமக்கள் பலரும், உள்ளூர் அரசியல்வாதிகளும் பங்கெடுத்தனர்.

இதில் கருத்துத் தெரிவித்த பிரதேசவாசிகள் வளமான இப்பிரதேசம் மதுபான சாலைகள் மூலம் சீரழிக்கப்படுகின்றனவென்றும், பாடசாலை மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வு இல்லாமையும் இதுபோன்ற பல்வேறு காரணங்களினாலும் இவற்றினை மூட வேண்டும் என்றும் கோஷங்களை எழுப்பினர்.

**ரஞ்சிதன்**



# 93 ஊடகவியலாளர்களைக் காவுகொண்ட 2016





சர்வதேச ஊடகவியலாளர்களின் சம்மேளத்தின் தரவுகளின்படி, 2016ம் ஆண்டில் 93 ஊடகவியாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் தென் அமெரிக்க நாடுகளான கௌதமாலாவும், மெக்சிகோவும் முதல் ஐந்து இடங்களில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த அமைப்பின் அறிக்கையில் 2015ம் ஆண்டினை விட 19 ஊடகவியலாளர்கள் குறைவாகப் படுகொலை செய்யப்பட்டிருந்தாலும், ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றது.

“வன்முறைகள் குறைவடைவது நல்ல விடயமே. எனினும் இங்குள்ள தரவுகள் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காகத் தெரியவில்லை” என்று சர்வதேச ஊடகவியலாளர்களின் சம்மேளனத்தின் தலைவர் பிலிப் வெரூத் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

பட்டியலில் 15 படுகொலைகளுடன் ஈராக் முதலிடத்தைப் பிடித்துள்ளதுடன், 13 படுகொலைகளுடன் இரண்டாம் இடத்தினை ஆப்கானிஸ்தான் பெற்றுள்ளது. ஆப்கானிஸ்தானின் டோலோ (Tolo Tv) பீலி எனும் ஊடக நிறுவனத்தின் ஊர்தி மீது தலிபான்களின் தாக்குதலில் ஏழு ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுப், பலர் காயமடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

இது போற்று, மெக்சிகோவில் 11 ஊடகவியலாளர்களும், யெமனில் 08 ஊடகவியலாளர்களும், சிரியாவிலும், கௌதமாவாவிலும் தலா 06 ஊடகவியலாளர்களும், இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் தலா 05 ஊடகவியலாளர்களும் கொல்லப்பட்டுள்ளதாகத் தரவுகள் குறிப்பிடுகின்றன.

திட்டமிட்டுப் படுகொலை செய்யப்பட்ட 93 ஊடகவியலாளர்களை விட, மேலதிகமாக பிரேசிலின் சபெகொ என்சே கால்ப்பந்தாட்ட அணியினரை ஏற்றிச் சென்று விபத்துக்குள்ளான விமானத்தில் 20 விளையாட்டுச் செய்தியாளர்களும், சிரியாவை நோக்கிப் பயணித்த ரஷ்ய இராணுவ விமானத்தில் இருந்த 09 ஊடகவியலாளர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

அத்துடன், பல ஊடகவியலாளர்கள் காணாமல் போயுள்ளதாகவும், பல நாடுகளில் ஊடகத் தணிக்கைகள் காணப்படுவதால் தரவுகள் சேகரிப்பதில் சிரமம் நிலவுவதாகவும் குறிப்பிட்ட இவ் அமைப்பினர், படுகொலைகளின் எண்ணிக்கை அதிகமாயிருக்க வாய்ப்புகள் காணப்படுவதாகவும் தெரிவித்தனர்.

ஊடகவியலாளர் படுகொலைகளில் அரபு - மத்திய கிழக்கு நாடுகள் முதலிடத்தையும், ஆசிய பசுபிக் பிராந்தியர் இரண்டாம் இடத்தையும் பிடித்துள்ளமை இங்கு விசேட அம்சமாகின்றது.

# தமிழ் நாட்டில் ஒரே நாளில் 8 விவசாயிகள் உள்ளடங்கலாக 3 நாட்களில் 29 விவசாயிகள் பலி




தமிழகத்தில் மழை தாமதமடைந்து வருவதனால், விவசாயிகள் பயிரிட்ட நெல் மற்றும் மஞ்சள் போன்ற சிறு பயிர்கள் கருகி வருகின்றன. இதனைத் தொடர்ந்து விவசாயிகள் பலர் நஞ்சுண்டும், தூக்கிட்டும் தற்கொலை செய்து வருகின்றனர். சிலர் துன்பங்களைத் தாங்கிக் கொள்ள முடியாமல் மாரடைப்பினால் உயிரிழந்து வருவதாகவும் தகவல்கள் வெளியாகி வருகின்றன. இதனிடையே, கடந்த வாரம் ஒரே நாளில் மாத்திரம் 29 விவசாயிகள் பலியாகியுள்ளார்கள்.

மக்களின் பட்டிணியைப் போக்க உழைக்கும் விவசாயிகள் தொடர்ந்தும் வாழ்வதற்கு வேறு வழியின்றி தற்கொலை செய்து கொள்வதனால் முழு நாட்டிற்கும் தலைகுனிவு என்றும், ஆட்சியாளரின் அசமந்தப்போக்கே இந்தத் இறப்புக்களுக்குக் காரணம் என்றும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கடந்த 05 ஆண்டுகளில் மாத்திரம் 2500 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் தமிழகத்தில் தற்கொலை செய்துகொண்டுள்ளதாகப் புள்ளி விபரம் கூறுவதுடன், தகுந்த திட்டமிடல் நடவடிக்கைகளின் மூலம் விவசாயிகளின் கடன் சுமையை இல்லாதொழிக்க முடியுமென்றும், கடன் சுமை இல்லாதொழிக்கப்படும் பட்சத்தில் தற்கொலைகள் தவிர்க்கப்பட முடியுமென்றும் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

# ஆக்கிரமிப்பாளர்கள் இல்லாத உலகொன்றிற்காக நாம் போராடுவோம்

## - பொலிவிய ஜனாதிபதி



ஆக்கிரமிப்பாளரும், ஆக்கிரமிக்கப்பட்ட மக்களும் இல்லாத உலகொன்றிற்காக நாம் போராடுவோம் என்றும், இது மக்களின் குரலாகவொலிக்கும் என்றும் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையில் தனது கன்னி உரையை நிகழ்த்திய வேளையிலேயே ஜனாதிபதிகள் தெரிவித்தார். இந்த வருடம் ஜனவரி முதலாம் திகதி பொலிவியா ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையில் தனது தற்காலிக உறுப்புரிமையை பெற்றுக்கொண்டது. இதற்கு முன்னர் 1964 தொடக்கம் 1965 வரையான காலப்பகுதியிலும், 1978 தொடக்கம் 1979 வரையான காலப்பகுதியிலும் பொலிவியா தற்காலிக உறுப்புரிமையைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உரையின் பின்னர் தரை ட்வீட்டர் தளத்தில் பதிவொன்றை மேற்கொண்ட ஜனாதிபதி பொராலெஸ், மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பது முதற்கொண்டு, அபிவிருத்தி வரையான விடயங்களில் ஒன்றாக செயற்பட வேண்டும் என்றும், முதலாளித்துவம் அனைத்தையும் நுகர்வுப் பொருட்களாக்கின்றது என்றும் தெரிவித்திருந்தார்.

பொலிவியாவுடன் எத்தியோப்பியா, கஸகஸ்தான், ஸ்வீடன் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகள் தமது தற்காலிக உரிப்புரிமையினை கடந்த முதலாம் திகதி பெற்றிருந்தன.

அத்துடன் உலகில் மனித உரிமைகளுக்கான அனைத்து சர்வதேசக் கருவிகளையும் பின்பற்றும் ஒரு சில நாடுகளில் பொலிவியா இடம்பெறுவதாகவும், புதிய ஜனாதிபதியாக எவோ மோராலேஸ் பதவியேற்றதன் பின்னர் 2006 முதல் பாரியளவு முன்னேற்றம் காணப்படுவதாகவும், ஐ.நா. சபையில் கடந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் டெனிஸ் ரெசிகொட் அவர்களினால் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழ் - மாணவர்களுக்கு வெள்ளி பதக்கங்கள்



ஏ.எட்வின்வூட்



எஸ். விஷ்ணுகாந்த்

மலேசியா கோலம்பூரில் நடைபெற்ற ஆசிய பளுதூக்கல் போட்டியில் இலங்கையிலிருந்து கலந்து கொண்ட யாழ்ப்பாணப் பாடசாலை மாணவர்கள் இருவர் வெள்ளிப்பதக்கங்களை வென்றெடுத்து எமது நாட்டுக்குப் பெரும் கௌரவத்தை பெற்றுத் தந்துள்ளனர்.

யாழ் இந்துக்கல்லூரி மாணவன் ஏ.எட்வின்வூட் 205 Kg எடையை தூக்கி வெள்ளிப்பதக்கத்தை வென்றார்.

ஆண்களுக்கான 20 வயதுக்குட்பட்ட 85 கி.கி. எடைப்பிரிவில் பங்கு பற்றிய யாழ் மத்தியக்கல்லூரி மாணவன் எஸ். விஷ்ணுகாந்த் ஸ்னெச்முறையில் 95 Kg எடையையும் க்ளீன் அண்ட ஜேர்க் முறையில் 110 கி.கி. எடையையும் தூக்கியதன் மூலம் 205 Kg எடையை பதிவு செய்து யாழ் மத்திய கல்லூரி மாணவன் வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

இதற்கு முன்பும் மலேசியாவில் இடம்பெற்ற அணிசேரா நாடுகளுக்கிடையிலான போட்டிகளில் பளுதூக்கல் போட்டியில் 58 Kg கீழ் போட்டியிட்ட அர்ஷிகா விஜயபாஸ்கர் அவர்கள் அதன் வெண்களப் பதக்கத்தை பெற்றதும் குறிப்பிடத்தக்கதாகும். இவர் யாழ்ப்பாணம் சுண்டிக்குழி மகளிர் வித்தியாலயத்தில் 11ம் ஆண்டில் கல்வி கற்று பல இன்னல்களுக்கு மத்தியில் இவ்வாறு எமது நாட்டுக்கு கௌரவத்தை பெற்று கொடுத்தது தொடர்பாக இவர்கள் அனைவருக்கும் எமது கௌரவத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவர்களுடைய - வெற்றி வெறுமனே விளையாட்டுத் துறையின் வெற்றியை விட சிறப்பான வெற்றியாகும். இது எமது நாட்டின் கௌரவத்தின் வெற்றியாகும். ஏனென்றால் பேரினவாதத்தை, மதவாதத்தை கதைத்து தமது அரசியல் நோக்கங்களை பூர்த்தி செய்து கொள்வதற்காக காய் நகர்த்தும் அரசியல்வாதிகள் தெற்கிலும் வடக்கிலும் காணப்படுகின்றார்கள். முன்னாள் ஜனாதிபதியவர்களும் இதற்கு அனுசரணை வழங்கியிருந்தார். 2015ம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தோல்வி கண்ட முன்னாள் ஜனாதிபதி அவரது சொந்த ஊரான மெதமூலனைக்குச் சென்று மக்களிடம் அவர் கூறியது, "மைத்திரி ஈழத்தின் வாக்குகளால் வெற்றிபெற்றார், ஈழவாதிகள் என்னை தோற்கடித்துவிட்டார்கள்" என்றாகும்.

பின்பு அவரது நண்பர்களும் அவரை பின்தொடர்ந்து இனவாதத்தையும் மதவாதத்தையும் பரப்பி வந்தார்கள். எதிர்கட்சித் தலைவர் பதவியை தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் அவர்களுக்கு வழங்கியதும், இதோ தமிழீழத்துக்கு வழிவகுக்கிறார்கள், நாட்டை புலிகளுக்கு காட்டிக்கொடுக்கிறார்கள் என்று கதறினார்கள். தேசிய கீதத்தை தமிழ் மொழியில் பாடியபோதும் "இதோ புலிகளுக்கு நாட்டை பலிகொடுக்கிறார்கள்" என்றும், புலிகளின் மகளிர் பிரிவு தலைவிக்கு சிகிச்சை வழங்கியபோது இதோ புலிகளுக்கு பாலூட்டுகிறார் என்று அவதூறு விலைவித்ததாக சிகிச்சை அளித்த வைத்தியரே கூறியிருந்தார்.


இவ்வாறு தேசப்பற்றைப் பற்றி கதைப்போர் கருணா அம்மான், போன்றோருக்கு ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் உபதலைவர் பதவியை, அமைச்சுப் பதவிகளையும் வழங்கும் போது ஒரு வார்த்தை கூட அதற்கு எதிராக கதைக்கவில்லை.

போலி தேசப்பற்றின் திரைமறைவில் நின்றுகொண்டு இனவாதத்தையும் மதவாதத்தையும் பரப்பும் நபர்களே, மலேசியாவில் வெற்றிகளைப் பெற்றுக் கொண்ட இந்த மாணவ, மாணவிகள் எந்த நாட்டை பிரதிநிதித்துவம் செய்தார்கள். இதன் கௌரவம் தமிழ் மக்களுக்கு கிடைக்கின்றதா? அல்லது நாட்டுக்கு கிடைக்கின்றதா என்று கேட்கிறோம்?

வெற்றியாளர்களே, உங்களது கழுத்தில் ஒலிம்பிக் பதக்கம் தொங்க வேண்டும் என வாழ்த்துவதோடு அதுவரை ஆவலாகவும் காத்திருக்கிறோம்.

\- சந்திரன் -

# நம்பிக்கையூட்டும் வாழ்த்துக்களை சிரியாவின் சிறுவர்களுக்கு அனுப்பிய கிறிஸ்டியானோ ரொனால்டோ



போர்த்துக்கேய கால்பந்து அணியின் தலைவரும், நட்சத்திர வீரருமாகிய கிறிஸ்டியானோ ரொனால்டோ, சிரியாவில் யுத்தத்தினால் பாதிப்புக்குள்ளாகியிருக்கும் சிறுவர்களுக்கு நன்கொடைகளை அனுப்பியுள்ளதுடன், நம்பிக்கையையும் கைவிட வேண்டாம் எனவும் தெரிவித்துள்ளார்.

" நீங்கள் மிகவும் துன்பத்துக்குளாகியிருக்கின்றீர்கள். நான் ஒரு பிரபல விளையாட்டு வீரராக இருக்கலாம். எனினும் நீங்கள் உண்மையான வீரர்கள். " என அவர் சமூக ஊடகங்களின் மூலம் வெளியிட்டுள்ள காணொளியில் தெரிவித்துள்ளார்.

கிறிஸ்டியானோ ரொனால்டோ அவர்கள், பிரபல சிறுவர் பாதுகாப்பு அமைப்புக்களின் தூதுவராக கடமையாற்றுவதுடன், பல தாராள மனங்கொண்ட நன்கொடைகளையும் வழங்கி வருவதாகவும் தகவல்கள் வெளிவருகின்றன. சிரிய அகதிகள் பலர் ஹங்கேரி செர்பிய எல்லை ஊடாக வந்த வேளையில், பெண் ஒளிப்பதிவாளர் ஒருவர் ஓடி வந்து தந்தையையும், அவர் தூக்கி வைத்திருந்த மகனையும், தந்தையின் கால்களில் தனது காலினால் தடையை ஏற்படுத்தி விழ வைத்திருந்த காணொளிகளும், புகைப்படங்களும் மிகவும் பரவலாகப் பரவியது. அதனைத் தொடர்ந்து அச் சிறுவனை கிறிஸ்டியானோ ரொனால்டோ ரியல் மட்ரிட் மற்றும் கிரனாடா அணிகளுக்கிடையேயான போட்டி நடைபெறும் மைதானத்திற்குத் தன்னுடன் அழைத்துச் சென்று மகிழ்வித்தமையும் குறிப்பிடத்தக்கது. குறிப்பாக இவர் சிரியாவில் 2011 முதல் இடம்பெற்று வரும் உள்நாட்டு யுத்தத்தினால் பாதிக்கப்படும் சிறுவர்கள் தொடர்பாக அதிக அக்கறை காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் தரவுகளின்படி, சிரியாவின் உள்நாட்டு யுத்தத்தில் ஐந்து இலட்சத்திற்கும் அதிகமானோர் பலியாகியுள்ளதாகவும், சிரியாவில் இரண்டு கோடி சனத்தொகையில் ஆகக் குறைந்தது ஒரு கோடி முப்பத்தைந்து இலட்சம் பேருக்காவது மனிதாபிமான உதவிகள் தேவைப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த உள்நாட்டு யுத்தத்தினால் ஆகக்குறைந்தது 60 இலட்சம் பேர் தமது அயல் ஐரோப்பிய நாடுகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். இதில் கணிசமான சிறு பிள்ளைகள் உள்ளடக்கப்படுகின்றனர். அகதிகளாக இடம்பெயர்ந்துள்ள இந்தச் சிறுவர்களில் பலர் கட்டாய அடிமைத் தனத்திற்குட்படுத்தப் படுகின்றனர் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடம் செப்டம்பர் மாதம் யுனிசெப் அமைப்பினால் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையில், உலகில் 50 மில்லியன் அகதிகள் சிறுவர்கள் எனக் குறிப்பிட்டுள்ளது.

வறிய குடும்பத்தில் பிறந்து, கால்பந்தாட்டத்தை ஆரம்பித்த ரொனால்டோ, போர்த்துக்கேய அணியினை ஐரோப்பிய கோப்பை வெற்றி வரையும், அவரது கழகமான ரியல் மட்ரிட் அணியினை ஐரோப்பிய கோப்பை, கழகங்களுக்கிடையிலான உலகக் கோப்பை வெற்றி வரையிலும் அழைத்துச் சென்றமை மாத்திரமல்லாது, உலகின் தலைசிறந்த கால்பந்து வீரருக்கான பரிசான தங்கப் பதக்கத்தினை நான்காவது முறையாகவும் சர்வதேசக் கால்ப்பந்து சம்மேளனத்திடம் இருந்து பெற்றுக்கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ரஞ்சிதன்

# சித்திரம் பேசுதடி



இவ்வாறு கல்வி கற்கும் பிள்ளைகள் உள்ள நாட்டிலேயே மாணவர்களுக்கு Tab வழங்கப்போகிறார்கள்.



## Don't Waste Food

பட்டினியாக பிள்ளைகள் உறக்கம் கொள்வதை பார்ப்பதை கடவுளும் விரும்ப மாட்டார்.



எங்களுக்கு வயதாகிவிட்டதால் சொகுசு வானங்கள் தேவைப்படுகின்றது.

வயதுபோன அமைச்சர்களுக்கு சொகுசு வானங்களை கொள்வனவு செய்வதற்கு பாடுபடும் இளைஞன்.



இங்கு காட்சியளிப்பது இங்கிலாந்து பாராளுமன்ற உறுப்பினர் Licia Ronzulli அவர்கள்.

அண்மையில் பிறந்த குழந்தையுடன் பாராளுமன்றத்திற்கு வருகை தந்திருப்பது தமக்கு வாக்களித்த மக்களுக்கு தமது பொறுப்பை ஆற்றுவது மகத்தானதாக விளங்கியபடியாலேயே ஆகும்.

ஆனால் இலங்கை பாராளுமன்றம் என்பது முற்றிலும் மாறான இடமாகும். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வு பெறும் சொகுசான இடமாகும்.



எல்லாமே இழந்துவிட்ட எம்மிடம் மிஞ்சியுள்ள சகோதரப்பாசம்

மகரகம தம்பஹேன வீதி, சமன் உயன, இல.22/13/1/1 என்ற விலாசத்தில் உள்ள, P2 பிரைவெட் லிமிடெட் தனியார் நிறுவனத்தினால் கங்கொடவில, வலவ்வத்த வீதியில், 43/43 என்ற டீ.ரீ.எல் பிரைவெட் லிமிடெட்டில் அச்சிட்டு பகிரங்கப்படுத்தப்பட்டது.